# திரு திரு என விழிக்காதீர்! திடுக்கிடாதீர்!

# திகைக்காதீர்!

## படிக்கட்டும்! பரீட்சையில் தேறட்டும்!!

## தோற்றால் துரத்துங்கள்— பதவியைவிட்டு விரட்டுங்கள்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (7—11—49) வெளியீடு (8—11—49) | இதழ் 84

## சொன்னதைச் செயலாற்றட்டும் பட்டாபி!

"தென் இந்தியர்கள் சீக்கிரத்தில் இந்தி கற்கவேண்டும். இல்லாவிட்டால் வட இந்தியாவில் அவர்களுக்கு மரியாதையோ அந்தஸ்தோ ஏற்படாது"

"சட்டசபை மெம்பர்களை இந்தி கற்கும் கட்டாயப்படுத்த வேண்டும்."

— டாக்டர் பட்டாபி

இத் திங்கள் ஐந்தாம் நாள் அனைத்து இந்திய காங்கிரஸ் தலைவர் பட்டாபி, கானூல் கூட்டத்தில் பேசும்பொழுது, வடநாட்டின் மதிப்பைத் தென்னாட்டினர் பெறவேண்டுமானால், கட்டாயமாக தென்னாட்டவர் இந்தியைக் கற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார். தென்னாட்டவர் — திராவிடர் — தமிழ் அறிந்தவர்களாக இருக்கலாம்; சுத்தத் தெலுங்கினில் பாட்டி சக்தும் பயிற்சி பெற்றிருக்கலாம்; மலையாள மொழியினை மாசறக் கற்றவர்களாக இருக்கலாம்; கன்னடத்தின் கரைகண்டவர்களாக இருக்கலாம்; இவ்வளவு இருந்தாலும், அவர்கள் மதிக்கப்படமாட்டார்கள் வடநாட்டவர்களால். திராவிடர் மதிப்புப் பெறவேண்டுமானால் இந்தி மொழியில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். இந்தி கற்றவர்களைத்தான், வடநாட்டினர் கவுரவிப்பர்! ஏனோ இந்த வடநாட்டவர் மதிப்பு நமக்கு? அதனால், நமது வாழ்க்கைத்துறைகளில் எது சிறப்படையுமோ நாம் அறியோம்! டாக்டர் பட்டாபி மட்டும் இதனைக் கூறவில்லை. நண்பர் காமராஜர் முதல், சாதாரண காங்கிரஸ் உறுப்பினர் வரை இந்த ஒன்றைத்தான் பல்லவியாகப் பாடிவருகிறார்கள்.

இந்தி, சமஸ்கிருதம், தாய்மொழி, வட்டார மொழி, ஆங்கில மொழி, ஆகிய அனைத்தையும் நமது சிறார்கள் கற்றுத் தேரவேண்டுமென்று குழந்தைகளின் மூளை நிலையையறியாது, கூறிவரும் மதிமிக்க மந்திரிகளும் இல்லாமல் இல்லை. ஊர்ப்பிள்ளையைவிட்டு ஆழம் பார்க்கும் பஞ்சதந்திரம் தெரிந்தவர்கள், இப்படிப் பேசித் திரியும் தென்னாட்டுக் காங்கிரஸ் கட்சியினரில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது நபர்களுக்கு இந்திமொழியின் அடியும் தெரியாது, நுனியும் தெரியாது. காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாகச் சேருகிறவர்கள் ஒவ்வொருவரும் இந்தி மொழி கற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனை ஒன்றைக் கட்டாயப்படுத்தினால், ஆயிரத்தில் ஒரு ஆள்கூட தென்னாட்டில காங்கிரசில் சேர்க்கமுடியாது. தமிழ—ஆந்திர—கேரள—கன்னட—காங்கிரஸ் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்களுக்காவது இந்தியில் சிறிதளவு பயிற்சியாவது உண்டா என்றால், அதுவும் பெரும்பாலும் இல்லை யென்றே நிச்சயமாகக் கூறிவிடலாம். சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்காவது, அது தெரியுமா என்றால், அதுவும் வெளியில் சொல்வதற்கே வெட்கக்கேடான விஷயமாகத்தான் இருக்க முடியும். காங்கிரஸ் அமைச்சர்கள் சங்கதி என்ன விஷயத்தில்? பூஜ்யம்-மூன்று பூஜ்யந்தான்!

டாக்டர் பட்டாபி தென்னாடு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள்மீது ஒரு பெரும் அணுக்குண்டை வீசியுள்ளார்! சட்டசபை உறுப்பினர்கள் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்கிறார் பட்டாபி. அதுவும், இந்தியைக் கற்கக் கட்டாயப்படுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். சட்டசபை உறுப்பினர்களுக்கு இது கலக்கத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்து, கோட்டான் போல திரு திருவென விழிக்கத்தான் செய்வார்கள். திடுக்கிடுவார்கள்—திகைப்படைவார்கள்—சட்டசபை உறுப்பினர்கள்!

இந்தியைப் படித்துக்கொள்ளுங்கள் படித்துங்கொள்ளுங்கள், என்று ஊராருக்கு உபதேசம் செய்துவருகிற இந்த உருப்படாதவர்களுக்கு, இவர்களே இந்தியைப் படித்துத் தேர வேண்டுமென்னும் தண்டனையைக் கொடுத்தால்தான், ஊராருக்கு ஓயாமல் கூறிவருவதையாவது நிறுத்தித் தொலைப்பார்கள். அப்பொழு

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

## மகிழ்ச்சி—நன்றி!

தோழர்களே!

மகிழ்ச்சிக்குரிய செய்தி. "திராவிட நாடு" இதழுக்குச் சர்க்கார் ஜாமீன் தொகை மூவாயிரம் ரூபாய்க் கட்டும்படி கேட்டிருந்ததைக் குறித்துத் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு நமக்குச் சாதகமாகக் கிடைத்துவிட்டது.

"திராவிடநாடு" இதழிலே சர்க்கார் குறித்துக்காட்டிய கட்டுரைகள், வகுப்புத் துவேஷத்தை மூட்டுவன அல்ல என்று தீர்ப்பளித்தது, சர்க்கார் உத்திரவை, சென்னை உயர்நீதிமன்றம், ரத்துசெய்துவிட்டது.

இந்தத் தீர்ப்பு, நமது தோழர்களுக்கெல்லாம், மகிழ்ச்சியும் எழுச்சியும் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனையொட்டி, சர்க்காரிடம் கட்டப்பட்டிருக்கும் மூவாயிரம் ரூபாயும், விரைவில், திருப்பித்தரப்படும் என்று அறிகிறேன்.

சர்க்காரின் அறைகூவலை ஏற்று, **ஜாமீன் தொகைக்காக** நன்கொடையை ஆர்வத்துடன் அளித்த தோழர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேற்படி தொகை என் கைக்கு வந்ததும், தோழர்களுக்குத் திருப்பி அனுப்ப இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். **ஜாமீன் தொகைக்காக** நன்கொடை அனுப்பியுள்ள நண்பர்கள், எந்த முகவரிக்கு, பணம் அனுப்பப்படல்வேண்டும் என்பதைக் காஞ்சிபுரம் "திராவிடநாடு" அலுவலகத்துக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

நெருக்கடியின்போது நன்கொடை உதவிய நண்பர்கள் பணம் திருப்பி அனுப்பப்படுவதைத் தவறாகக் கருதாமல், நெருக்கடிகள் எப்போது ஏற்பட்டாலும், இது போன்ற ஆதரவுகாட்டும் அன்பினை எனக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்ப்பின் முழு விவரம் கிடைத்த பிறகு, "திராவிடநாடு" இதழில் வெளியிட எண்ணியுள்ளேன். வணக்கம்.

அன்பன்,

**அண்ணாதுரை**

## நீதி பறிபோகும் படலம் ஆரம்பம்

### அவசரச் சட்டம் ஆட்சி செலுத்துகிறது

"1949-ம் ஆண்டு சென்னை பொது ஜன பந்தோபஸ்து (நான்காவது) அவசரச் சட்டம் செல்லத்தக்கது. அதனைப் பின்தேதி முதல அமுல் நடத்த கவர்னருக்கு அதிகாரமுண்டு" என்று கடந்த 4-ம் தேதி சென்னை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பளித்துள்ளது.

30 காவற் கைதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் விண்ணப்பங்களைத் தள்ளுபடிசெய்து மேற்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த நான்காவது அவசரச் சட்டம்தான் சென்னைச் சர்க்கார் இறுதியாகப் பிறப்பித்துள்ள பாதுகாப்புச் சட்டமாகும். பொதுவாகப் பாதுகாப்புச் சட்டம் என்பது எத்தகையது என்பதுபற்றி விளக்கத் தேவையில்லை. அன்று வெள்ளையர் தங்களுடைய ஏகாதிபத்தியக் கொள்கைக்குப் பாதுகாப்புத்தேட 'இந்திய பாதுகாப்புச் சட்டம்' என்ற சட்டத்தை இயற்றினர். அவர்கள் அன்னியர்கள், ஜனநாயகம் அறியாதவர்கள் என்று எண்ணினோம். ஆனல், இன்று ஆட்சிக்கு வந்திருக்கும் புண்ணியர்களால் இந்தப் பாதுகாப்புச்சட்டத்துக்கும், அந்த அன்னியர்கள் செய்த பாதுகாப்புச்சட்டத்துக்கும் வேற்றுமையே காண முடியவில்லை. வேற்றுமை காண முடியாதது மட்டுமல்ல, வெள்ளையர் செய்ததை விட நம்மவர் செய்திருக்கும் இச்சட்டம் வேதனை தரும் சட்டமாக அமைந்திருக்கிறது. இந்தவேதனை நாளுக்கு நாள் அதிகரிக்கும் வண்ணம் அவசரச்சட்டங்கள் தோன்றுகின்றன. அவற்றுள் இந்த நான்காவது சட்டம் ஜனநாயகத்துக்கே புறம்பானது. நீதி மன்றத்தின் சுதந்திரத்தையே பறிப்பதாகும். இவ்வண்ணம் நீதி மன்றத்தின் சுதந்திரம் பறிபோகும் படலம் ஆரம்பமாவதைக் காட்டுவதுதான் மேலே தரப்பட்டிருக்கும் உயர் நீதி மன்றத்தீர்ப்பு.

## கவலையுண்டு: சப்ளை தானில்லை

இப்போதைய சர்க்கரை நெருக்கடிக்குக் காரணம் சப்ளை இன்மையேதானென்றும், சர்க்கார் துரிதமான ஏற்பாடு எடுக்காதது அல்லவென்றும் சர்க்கார் செய்தியொன்று கூறுகிறது. இம்மாகாணத்துக்கு மாதமொன்றுக்கு 10,000 டன் சர்க்கரைத் தேவைப்படுகிறது! ஆனல் மத்திய சர்க்காரோ செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய நான்கு மாதங்களுக்கும் மொத்தத்தில் 14,700 டன்னே ஒதுக்கியுள்ளனர், என்று சர்க்கார் தெரிவிக்கின்றனர்.

# மாலை மணி

சென்னை 7—11—49 திங்கட்கிழமை


# நோய் தீர வழி

**"டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். அங்கு அவர்களுக்கு ஏராளமான வேலைகள் காத்துக்கொண்டிருக்கின்றன"**

என்று இந்திய சுகாதார மந்திரியார் தோழியர் ராஜகுமாரி அமிர்த கௌரி, இந்திய வைத்திய சங்கத்தின் சிம்லா கிளையின் ஆண்டு விழாவில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர்களுக்குத் தோழியர் ராஜகுமாரி அமிர்தகௌரி கூறும் அறிவுரை அழகாகத்தானிருக்கிறது-சொல்லவும் அழகாக இருக்கிறது, கேட்கவும் அழகாக இருக்கிறது! ஆனால் நடை முறையில் இயலுமா? இயலுகிறதா?

டாக்டர்களுக்குக் கிராமங்களில் ஏராளமான வேலைகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதிலும் பொருள் பொதிந்து கிடக்கிறது. இன்றைய நிலையில், கிராமங்கள் இருக்கும் மாதிரியையும், டாக்டர்கள் இருக்கும் அமைப்பையும் பார்த்தால், கிராமங்கள் டாக்டர்களை ஏற்றுக்கொள்ளும் மாதிரியிலோ, டாக்டர்கள் கிராமங்களுக்குச்செல்லும் மாதிரியோ,சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றனவா என்றால், இல்லை என்று தான் கூற வேண்டும்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி நம் நாட்டில் கூறப்படுகின்றது-கேட்கப்படுகின்றது-ஆனால் காணப்பட வில்லை! வறுமை-பசி-பிணி இவை மூன்றும் மக்களைச் செல்லரித்து வருகின்றன; குறிப்பாகக் கிராம மக்களை எலும்புக் கூட்டினராக ஆக்கி வருகின்றன. பிணிகள் நாட்டில் பெருகுவதற்கு நோய்க் கிருமிகளைக் காட்டிலும்; மிகவும் அடிப்படைக் காரணங்களாக இருந்து வருவன வறுமையும், அதன் வாயிலாக ஏற்படும் பசியும் அறியாமையுமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே வாழும் கிராம மக்களிடையே, பெருஞ் செலவை உடனழைத்துச் செல்லும் மேனாட்டு வைத்தியம் எப்படி நுழைய முடியும்?

ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, மேனாட்டு வைத்தியக் கல்வி கற்றுத் தேர்ச்சி அடைந்து, பட்டம் பெற்று, விலையுயர்ந்த மருந்துகளைக் கையிலேந்தி நிற்கும் டாக்டர்களைக் கிராமங்களுக்குச் செல்லுங்கள் என்றால், ஏழை கிராம மக்களிடம் டாக்டர்களுக்குக் காணிக்கை தர கையில் தாவடணம் உண்டா? மருந்து வாங்கத்தான் வசதியுண்டா? டாக்டர்களோடு பழகிப் பக்குவம் பெற மனம் உண்டா?

வறுமை-அறியாமை இரண்டினையும் கட்டித் தழுவிக்கொண்டிருக்கும் கிராம மக்களிடத்தில், மேனாட்டு மருந்துகளை விற்கவும் முடியவில்லை. மருந்துகளை வாங்க வைத்துக்கொண்டிருக்கவும் ஏற்றுக் கொள்ளச் செய்யவும் முடியவில்லை; இந்த இரண்டுவித இடையூறுகளைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் டாக்டர்கள். இந்த இரண்டு வித இடையூறுகளின் காரணமாக கிராமங்களில் வாழ முடியாமல், சென்று முயன்றுபார்த்த எத்தனையோ டாக்டர்கள் மீண்டும் நகர்ப்புறங்களுக்கு வந்து விட்டிருக்கிறார்கள். நகர்ப்புறங்களில் மேனாட்டு வைத்திய முறையின் தன்மையையும் உணர்கிறார்கள், மருந்துகளை வாங்கிக்கொள்ளவும் ஓரளவுக்கு வசதியிருக்கிறது. இந்த நிலைமைகளை உணர்ந்து, கிராம மக்களிடையே பரவிக்கிடக்கும் நோய்களைப் போக்க புதிய வழி முறைகளைக்காண அரசாங்கம் முயல வேண்டும்.

வறுமையைப்போக்கி விட்டுப் பிறகுமருத்துவ வசதிகளைக்காண்போம் என்று வாளா இருக்கவும் முடியாது. வறுமையைத்தொலைக்கும் முயற்சி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க வேண்டும் என்றாலும், அதே வறுமை நிலையில் நோயினைப் போக்க ஏதாவது எளியமுறை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். அதைச் செய்ய இன்றைய அரசாங்கம் முன் வந்ததா என்றும் கவனிக்க வேண்டும்.

தென்னாட்டைப் பொறுத்த வரையில், இந்த நாட்டின் தட்பவெட்பநிலை-நிலப்பாங்கு--உணவு வகைகள்—மக்கள் உடற்பாங்குபாடுகள் இவைகளை நன்கு ஆராய்ந்தறிந்து, தொன்று தொட்டு சித்த வைத்தியம் என்ற ஒரு முறையைக் கையாண்டு வருகிறார்கள். அது ஏனோ நகர்ப்புற மக்களாலும், அரசாங்கத்தாலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டது? அது இந்த நாட்டுக்கு ஏற்ற முறை; அதன் மூலம் வகுக்கப்படும் மருந்துவகைகள் இந்த நாட்டிலேயே எளிதில் கிடைக்கின்றன; மேனாட்டு வைத்திய முறை மருந்துகளைப் போல் அல்லாமல் மிக மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியன, இத்தகைய தன்மைகள் வாய்ந்த சித்த வைத்தியம் கிராமங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி விரிவான முறையில் கையாள அரசாங்கம் முயற்சி எடுத்தால், வறுமை நிலையிலேயே நோயினைப் போக்கிக்கொள்ளும் வசதி இந்நாட்டு கிராம மக்களுக்கு ஏற்படும். அதை விடுத்து இந்நாட்டிற்கு அதிகச் செலவு வைக்கும் மேனாட்டு வைத்தியத்தையோ இந்த நாட்டிற்கு எவ்வகையிலும் ஒவ்வாத ஆயுர்வேதத்தையோ புகுத்தினால் எப்படி மக்களுக்கு முழுவதும் பயன் படுவனவாக அவை இருக்கும்.

பெரும்பாகம் சித்த வைத்தியமும், சிறுபாகம் மேனாட்டு வைத்தியமும் கற்றுக்கொண்ட டாக்டர்கள், உருவாக்கப்படுவார்களேயானால், தென்னாட்டைப் பொறுத்தவரையில்; கிராமங்களிலுள்ள நோய்க்கொடுமை ஓரளவுக்காவது நீங்க வழியேற்படும். குறைந்த செலவில் பயிற்சிபெற வசதி இருக்கிறது! ஏழை மக்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வசதியிருக்கும்; மருந்துகள் சூழ்நிலையிலேயே கிடைப்பதால் எளிதில் அடையலாம்; மக்களின் மனப்போக்கும் சித்தவைத்தியத்தை ஏற்றுக்கொள்ளும். சித்த வைத்தியம்—மேனாட்டு வைத்தியம் இரண்டும் கலந்த எளிய முறையில் வைத்தியம் செய்ய டாக்டர்களைத் தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பை, சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அமிர்த கௌரியின் அழகான அறிவுரைக்குப் பலனேற்பட்டதாகக் கருதமுடியும். ஆனால் சென்னை அரசாங்கமோ சித்த வைத்தியத்தைப் புறக்கணித்து, வேண்டாத ஆயுர் வேதத்தைப் போற்றி வளர்க்க மிகக்கவலை கொள்கிறது. யார் செய்யும் சூதோ? அறியக்கூடவில்லை!

நாட்டின் வறுமை எந்தமுயற்சிலாவது அடியோடு தொலைக்கப்படும் நாள்வரையில், எளிய முறையில் மருத்துவம் பெறும் மார்க்கத்தை மக்களுக்கு அளிக்க வேண்டும். மேனாட்டு வைத்திய முறை அதற்கு உகந்ததாகஇல்லை. சித்தவைத்தியம் ஏற்றதாக இருக்கிறது, ஆகவேதான் நாட்டிற்கு ஏற்ற சித்தவைததியத்தைக் கற்றுக்கொண்ட டாக்டர்கள், கிராமங்களுக்குச் சென்றால், அங்குக் காத்துக்கொண்டிருக்கும் ஏராளமான வேலைகளை, எளிதில்செய்து முடிக்க, வசதி ஏற்படும் என்று கூறி, அப்படிப்பட்ட டாக்டர்களை அதிகமான அளவு தோற்றுவிக்கும்படி அரசியலாரை வற்புறுத்துகிறோம்.

கிராமங்களில் நோய்கள் வளர அறியாமை காரணமாக இருக்கிறது, என்று குறிப்பிட்டோம். கிராமமக்கள், காளியையும், காட்டேறியையும், மாரியம்மனையும், மகேசுவரனையும் நம்பி. எவ்வித வைத்தியமும் செய்துகொள்ள மறுத்து, நோய்களைப்பெருக்கிக் கொண்டு. செத்து மடிகிறார்கள். அந்தக் கொடுமைகளினின்றும் மக்களைக்காப்பாற்ற வேண்டுமாயின், டாக்டர்கள் மட்டும் கிராமங்களுக்குச் சென்றால் போதாது, டாக்டர்களுக்கு முன்பு பகுத்தறிவுப் படையினர் செல்ல வேண்டும். உடல் கோளாறுகளை டாக்டர்கள் தீர்த்து வைப்பதற்கு முன்பு, உள்ளக் கோளாறுகளைத் தீர்த்து வைக்கக் கூடியவர்கள் பகுத்தறிவாளர்களேயாவார்கள், உள்ளப் பழுதுகளைப் பார்த்துச் சீர்படுத்தும் வேலையினை மேற்கொண்டிருக்கும் 'பகுத்தறிவு டாக்டர்களை' கிராமங்களுக்குச் செல்லவிட வேண்டுவதே அரசாங்கத்தின் முதல் கடமையாகும். ஆனால் சென்னை அரசாங்கமோ பகுத்தறிவு சிகிச்சை செய்யும் அறிவியக்கத்தினரை நாடெங்கிலும் நகரவொட்டாதபடி, தடைசெய்து வருகிறது. நோயைத் தீர்க்க, டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்வதற்கு முன், அறியாமை அகற்றும் அறிவுப் பணிபுரிவோரை அடக்கும் நோயைக் கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு வைத்தியம் செய்ய டாக்டர்கள் தேவைப்படுகிறார்கள்! அரசாங்கத்தின் நோய் தீர்ந்தால், நாட்டைப் பிடித்திருக்கும் நோய், மக்களைப் பிடித்திருக்கும் நோய் எல்லாம் அகன்றுவிடும்! நோய் தீர அதுவே சிறந்த வழி!

# சென்னை அரசாங்கம் என்ன செய்கிறது?

## கைத்தறித் துணிகளை வாங்க ஏன் இன்னும் முன்வரவில்லை?

**சென்னை மாகாணத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளி ஆண்டு தோறும் உற்பத்தியாகின்றது இப்போதுசுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளி வாங்குவாரற்றுத் தேங்கிக்கிடக்கிறதென்று மதிப்பிடப்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய இந்திய அரசாங்கம் தங்களுடைய பல்வேறு இலாக்காக்களில் தேவைக்காக வேண்டியுள்ள ஒரு கோடி ரூபாய் கைத்தறி ஜவுளியில 40 லட்சம் ரூபாய் மதிப்புள்ளவற்றைச சென்னையிலிருந்து வாங்குவதென்று முடிவு செய்திருக்கிறது. ஆனால் இந்த ஜவுளி இந்திய அரசாங்கத்தின் உபயோகத்துக்கு ஏற்றவைகளாக இருக்க வேண்டுமென்று நிபந்தனை கூறப்பட்டிருக்கிறது.**

**இந்த நிபந்தனையின் காரணமாக, மத்திய அரசாங்கத்திலே, கைத்தறி ஜவுளிகளை ஏற்றவை, ஏலாதவை என மதிப்பிட்டு வாங்கும் பொறுப்பளிக்கப்படும் இலாக்கா அதிகாரிகளுக்கிடம் கொடுத்து விடாதபடி இருக்குமாறு கவனித்துக்கொள்ள வேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.**

**எப்படி இருந்தபோதிலும், மத்திய அரசாங்கம் துணிவுகொண்டு 40 லட்சம் ரூபாய் மதிப்புடைய கைத்தறி ஜவுளிகளை வாங்க முன்வந்திருப்பது போலச் சென்னை மாகாண அரசாங்கம் ஏன் கைத்தறித் துணிகளை வாங்குவதென்று திட்டம் வகுக்கவில்லை.**

**உண்மையிலேயே, இந்த நாட்டிலே, கைத்தறி நெசவாளர்கள் வறுமைவாய்ப்பட்டுத் தொழில் இடைக்காதவர்களாய், உணவற்றவர்களாய்ச் சாகாதபடி காக்க அரசாங்கத்தால் முடியும். நம் நாட்டுத் தேசபக்த சிகாமணிகளால்முடியும், சென்னை மாகாண அரசாங்கம் தன் இலாக்காக்கள் அனைத்திற்கும் கைத்தறி நெசவுத் துணியையே வாங்கிப் பணிப்பதென்று முடிவு செய்து விட வேண்டும். காங்கிரஸ்காரர்கள் அனைவரும், கைத்தறித் துணிகளையன்றி மற்றத்துணிகளை உபயோகிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்து அதே போன்று, ஒவ்வொருவரும் கைத்தறித்துணியையே வாங்கி அணிந்து நாட்டு மக்கள் அனைவரையும் கைத்தறித்துணியையே வாங்கிஅணியுமாறு காதிப் பிரசாரம் செய்வதைப் போன்று தீவிரமாகச் செய்தல் வேண்டும் இப்படிச் செய்தாலன்றி, லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டுள்ள இத்தொழில் உயிருடன் இருக்க முடியாது. இத்தொழில் நசிக்குமானால, லட்சக்கணக்கான குடும்பங்கள் பசியால் வாடி மடிய நேரும். இதற்கு நாட்டில் ஆளுங்கட்சியினராக உள்ள காங்கிரஸ்காரர்கள் இடமளிக்கப் போகின்றனரா? அல்லது இக்கொடிய நிலையை நிவர்த்திக்க முன்வரப்போகின்றனரா?**

**இதனைம் நாட்டு மக்களுட் பெரும்பாலோர் பிழைப்புக்கு வழியாயிருக்கும் கைத்தொழில் நெசவுத் துணிகளை நாட்டுமக்கள் வாங்கி அணியுமாறு செய்வதில் ஆளுங்கட்சியார் தவறிவிட்டால், அதில் ஆர்வம் காட்டித் தொண்டாற்றாமல் அசட்டை செய்துவிட்டால் நாட்டுப் பொதுமக்கள் அடுத்த தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கு நாட்டு மக்களின் நலனில அக்கறைகொள்ளாதவர்கள் வெறும் மக்கள் ஆதரவுபெற முடியாது என்பதை எடுப்பித்துக் காட்டி விட வேண்டும். காங்கிரஸ்காரர்களோ எப்பொழுதும்கூறி ஓட் கேட்கும் வல்லமை வாய்ந்தவர்கள். தேர்தல்காலங்களில், காங்கிரஸ்காரர்வெளியிடும் அறிக்கைகளும் பேசும் பேச்சுகளும் கேட்போர் மயங்கும் வண்ணம் இருக்கும். ஆனால் மயங்கிய விட்டிலைப் போல மக்கள் வாழ்வு ஆளும்கட்சியினரால் ஆக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கவனித்து மக்கள் இருப்பட நடந்தால், தேர்தல் காலத்தில், இவ்வாறு மக்களிடம் ஓட் வாங்கிச் சென்ற மக்கள் நலன் கவனியாதவர்களுக்குப் புத்தி கற்பித்தால் தன் வண்மையில் நாட்டு நிலையும் மக்கள் நிலையும் முன்னேற முடியும்.**

## சென்னைமாநிலத்தை வடநாடு நடத்தும்வகை

### தென்னாட்டவரும் மக்கள் தான் எனப்படவில்லையோ!

**"சென்னைமாநிலத்துக்கு மாதா மாதம் மொத்தம் 10,000டன் சர்க்கரை தேவைப்படுகிறது. ஆனால், ஆலைகளிலிருந்து மத்திய அரசாங்கம முடக்கி விட்ட சர்க்கரையில், செப்டம்பர் முதல் டிசம்பர் முடியவுள்ள 4 மாதங்களுக்குமாக 14,700 டன் சர்க்கரை மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டது. அதாவது 4மாதங்களுக்கும் சென்னை மாநில மக்களுக்கு வேண்டிய சர்க்கரை 40,000 டன். ஆனால் மத்திய அரசாங்கம் ஒதுக்கி வைத்திருப்பது 14,700 டன்களே. இந்த 14,700 டன் சர்க்கரையும் ஒரே மொத்தமாக உடனடியாகக்கிடைத்து விடவில்லை. இதில் பாதியாகிய 7200 டன் மட்டும் முதலில் அனுப்புவதாகக் கூறப்பட்டது. ஆனால் நமக்கு வந்திருப்பது மிகச்சொற்ப அளவே தான்"**

**என்று சென்னை அரசாங்கம் அறிவிக்கிறது.**

**நாட்டு மக்களுக்குத்தேவையான சர்க்கரைத்தட்டுத்தடங்கலில்லாமல் கிடைத்துக் கொண்டிருந்தது. காங்கிரஸ் ஆட்சியாளரின் கண்காணிப்பு சர்க்கரைக்கு ஏற்பட்டவுடன், சர்க்கரை நிலை அல்லோல கல்லோலமாகி விட்டது. ஆனால், சர்க்கரையிலிருந்து ஒரு செய்தி நமக்கு மிக மிக நன்றாக விளங்குகிறது. மத்திய அரசாங்கம் தென்னாட்டவரை எப்படி நடத்துகிறது என்பதை மக்கள் நன்கு அறிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு. ஆளும் கூட்டத்தார் கூட, இந்நிலை கண்டு சகிக்க முடியாமல் தான் தங்கள் அறிக்கையில், மத்திய அரசாங்கத்தின் போக்கைத் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டி விட்டார்கள் போலும்! இந்நிலையில் நம் உரிமைகளையும் நலன்களையும் சடியும் அளவிற்கு மத்திய அரசாங்கம் நடந்து வருவதை இந்நாட்டு அமைச்சர்கள் எவ்வளவு நாளைக்குத்தான் விட்டுக்கொண்டு சென்று, நம நாட்டவர்களின் நல்வாழ்க்கைக்குத்தடையாய் இருக்க முடிவு செய்திருக்கின்றனர் என்பதும், பொதுமக்கள் எவ்வளவு நாளைக்குத்தான் இவ்வாறு சங்கடப்பட்டுக்கொண்டிருக்குமாறு செய்யப்படப் போகின்றனரென்பதும் தெரியவில்லை.**

# கடைப்பிடிக்கும் கதர்க்கொள்கைக்குக் ‘கதிமோட்சம்’ வேண்டாமா?

## சர்க்கார் சிப்பந்திகட்குக் கட்டாய ‘கோணிசாக்குத்’ திணிப்பு!

## ஆட்சியாளரின் ‘வாலிழந்த நரி’வாதம்!

கதருக்கு அதன் அபிவிருத்திக்கு எல்லா வகையிலும் ஊக்கம் உற்சாகம் அளித்தே ஆக வேண்டுமென்பது சர்க்கார் கொள்கை. இதனைச் சர்க்கார் முடிந்த முடிவாகக்கொண்டுவிட்டனர். சர்க்கார் தங்களது கதர்க் கொள்கையை இனி மாற்றிக் கொள்ள முடியாது. ஆகவே சர்க்கார் சிப்பந்திகள், யூனிபாரம் அணிய வேண்டிய நிப பெற்றோர்-கட்டாயம் கதரையுடுத்தித்தான் தீரவேண்டும்; சர்க்கார் காரியங்களுக்கெல்லாம் கதரைப் பயன்படுத்தியே தீர வேண்டுமென்பதாகச் சென்னை சர்க்கார் பல்வேறு இலாகாக்களின் தலைவர்கட்கெல்லாம் ஆணை பிறப்பித்துவிட்டனர்.

கதர் உபயோகிப்பதினின்றும் தங்களுக்கு விதிவிலக்களிக்க வேண்டுமென்று கோரியிருந்த அதிகாரிகளுக்கும் ‘முடியாது’ என்று கூறிவிட்டனராம் சர்க்கார்.

சர்க்காரின் கதர்க்கொள்கை எப்படி? ‘சாண் ஏற, முழம் சறுக்க’ என்ற நிலையிலிருக்கும் கதர் அபிவிருத்திக்கு உயிர் கொடுக்க சர்க்கார் கையாண்டிருக்கும் கொள்கை எவ்வளவு தூரம் ‘காட்டுமிராண்டித்தனம்’ மிக்கு காணப்படுகிறதென்பதை சாதாரண அறிவு படைத்தோரும் தெள்ளிதின் உணர்ந்துகொள்ளலாம். கட்டாயமாகச் செய்ய வேண்டியவை, வலியுறுத்தப் பெற வேண்டியவை எவ்வளவோ இருக்க அவைகளையெல்லாம் விடுத்து மறந்து, நினைக்க மறுத்து பொருளற்ற அதே நேரத்தில பொருளையும் விரயமாக்கும் இத்திட்டம் எற்றுக்கு என்பதை ஓரளவு பொறுப்புள்ளவரும் கேட்கத் தவறமாட்டார்களே!

சர்க்கார் செய்த ஆராய்ச்சியில் கதர் நீண்டநாள் உழைக்கக் கூடியது— கலை நயமிருக்கிறது’ என்று தெரிய வந்திருக்கின்றனராம்! எங்கு, எப்படி இவர்கள் கணக்கெடுத்தார்களென்று கேட்கிறோம். கதரைப் பொருளாதாரம் கடியப்பட்டு வருவதற்கே காரணம் அது நிறைந்த உழைப்பைக் கவருகிறது. ஆனால் குறைந்த பயனையே தருகிறது என்பதினால் தானே! உழைப்புச் சக்தியை நிரம்பக் கவர்ந்தும் சர்க்காரது முடிக்கா இருக்கிறதாவென்றால், முடுக்கைக் காணோம். மூடத் தன்மையைத்தான் காண்கிறோம். அப்படியிருக்க சர்க்காரின் கூற்று எப்படிப் பொருந்தும்!

கதரைப் பரப்பியே தீருவதென்று கட்டாய முடிவுக்குச் சர்க்கார் வந்திருப்பார்களானால், தங்கள் கொள்கையை நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற அடம் கட்டி நிற்பார்களானால், அவர்கள் முயற்சிக்கு ஏற்றதாக ஓரே ஒரு வழிமட்டுமே உண்டென்று கூறுவோம்.

இதை கட்டாய ஆரம்பக் கல்வி பரவிவரும்காலம் இளைஞர்களிட்டுமல்ல, கல்விபெறு மதியோரும் படிக்கத் துவங்கி விட்டக்காலம். அவர்களிடையே கதரை எளிதில் பரப்ப சர்க்காருக்கு நல் வாய்ப்பிருக்கிறது. மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளில் கரும்பலகைத் துடைக்கும் துணியாக (Duster) கதரைப் பெரிதும் பயன்படுத்தலாம். என்றும் உழைக்கும். விலை சரசமா என்று கேட்டால் மட்டும் நம்மால் பதில் சொல்ல முடியாதே தவிர, சர்க்காரின் கொள்கை நிறைவேற்றத்துக்கு இதுவே தகுந்தவழி சக்கரும் இதை எளிதில் சாதிக்கமுடியும். பிடித்துத் துடைக்கும் ஆசிரியரோ, தேய்க்கப்படும் கரும்பலகையோ இது விஷயத்தில் ‘தகாது’ எதுவும் செய்யப்படப் போவதில்லை.

கரும்பலகை துடைப்பதற்குதவுவது தவிர, கதர் வேறு எதற்கும் பயன்படப் போவதில்லை. அப்படி வலுக்கட்டாயமாய் பயன்படுத்த வேண்டுமென சர்க்கார் வலியுறுத்துவரேல், அவர்கள் மக்களை ‘மரவுரி-இலையாடை’ பணிந்த கற்காலத்துக்குத் திருப்பி அழைக்கிறார்களென்பது தான் பொருள்.

### சீக்கியரின் பரிதாபநிலை

கிழப்பஞ்சாபில், இந்துக்கள் குறுகிய மனப் பான்மையுடைய மத வெறியர்களாகித் தங்களை ஒடுக்க முயல்வதாக, சீக்கியத் தலைவர் மாஸ்டர் தாராசிங் அறிவித்து, சீக்கிய மாகாணம் தனியே பிரிக்கவேண்டுமென்று கோருகிறார்.

கிழ்ப்பஞ்சாபில் சீக்கியர் மிகுதி. ஆனால் அவர்களுட் பெரும்பாலோர் உழவர்—ஜாட்கள். இந்துக்கள் தர்மப்படி உழவுத் தொழில் இழி தொழில். அத்தொழில் செய்பவர்கள் கீழ் மக்கள். எனவே, அங்குள்ள இந்துக்கள் சீக்கியருக்கு அரசாங்க பதவிகள், நிர்வாகப் பிரிவுகள் முதலியவற்றில் நியாயமான உரிமை காட்டுவதில்லை. எல்லாத் துறைகளிலும் பாரபட்சமே காட்டப்படுகிறது. பெயருக்கு ஒரு சீக்கிய மந்திரி இருக்கிறாரே ஒழிய அவருக்கு எந்த இலாக்காப் பொறுப்பும் இல்லை. சீக்கியர்களே பெருவாரியாகவுள்ள அங்கே சீக்கிய மொழியைக் கைவிட்டு அரசாங்க மொழியாக இந்தியைத் திணிக்க முயலப்படுகிறது. இவையனைத்தும் அந்நாட்டு மக்களாகிய சீக்கியர்களின் சந்தேகத்தையும் அச்சத்தையும் கிளப்பிவிட்டன. எனவேதான் சீக்கியர்களின் தனிமாகாணம் கோருகின்றனர். இதே நிலைமை தான் இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தப் பேராசை கொண்டுள்ள மற்ற மாகாணங்களிலும். இந்நிலை மாற வேண்டுமாயின், இந்துக்களின் மதப்பற்றை அரசியலில் புகுத்தவிடாமல் வீட்டளவில் வைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசாங்கம் செய்ய வேண்டும். அவ்வந் நாட்டு மக்களுக்கே ஆதிக்க உரிமை அளிக்க வேண்டும். இல்லையெனில், நாட்டிலே இத்தகைய கிளர்ச்சிகள் ஆங்காங்கே தோன்றிக் கொண்டுதானிருக்கும்.

## எல்லாவற்றிற்கும் ஒரே பாட்டுத்தானா?

## இருப்பிலிருந்தபணம்என்னவாயிற்று?

சென்னை அரசாங்க ஊழியர்கள் கூட்டத்தில், சென்னை நிதியமைச்சர் பேசுகையில்,

“மக்களுக்குக் கொடுத்த பல உறுதிமொழிகளை நிறைவேற்ற இயலாததற்குக் காரணம் பணக் கஷ்டமே என்றும், நிர்வாகக் கலை ஒரு கஷ்டமான கலை. அக்கலையை அமைச்சர்கள் இன்னும் பயின்று வருகின்றனர்.”

என்று கூறினர். பொதுவாக நம் மாநிலத்து அமைச்சர்கள் அனைவரும் எதற்கெடுத்தாலும் பணக் கஷ்டம் என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். பணக் கஷ்டம் என்று மக்கள் கூறி, வரி தர இயலவில்லை என்றால் அரசாங்கம் சும்மா விடுமா? சட்டபூர்வமாக மிரட்டி வரி வசூல் செய்துவிடவில்லையா? அப்படியிருக்க, வரி தரும் மக்களுக்கு நன்மைகள் செய்ய வரும்போது, பணக் கஷ்டப் பேச்சு பேசுவதன் கருத்தென்ன? என்பது தான் நமக்கு விளங்கவில்லை.

காங்கிரஸ்காரர்களிடம் வெள்ளையன் நாட்டை ஒப்புவித்தபோது, ரிசர்வ் நிதியாக அளித்துவிட்டுச் சென்ற தொகை 55 கோடிரூபாய். ஆனால் இன்று காங்கிரஸ்காரர்கள் அந்த ரிசர்வ் நிதியை எந்த அளவில் வைத்திருக்கின்றனர்? குறைபாட்டுக்குக் காரணம் என்ன? எந்த அவசர நிலைமையைச் சமாளிக்க அதனின்று பணம் எடுக்கப்பட்டது! என்பவைகளை மக்கள் உணருமாறு செய்ய ஆளும் கட்சியினருக்கு இயலுமா?

அடிக்கடி மதுவிலக்கால் பெருந்தொகை வருமானம் அரசாங்கத்துக்கு வருவது நின்றுவிட்டது என்று கூறப்படுகிறது. ஆனால், அதற்குப் பதில் விற்பனைவரி மூலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்தின் தொகை என்ன? மதுவால் வரும் வருமானத்தை விட விற்பனை வரியால் அதிகப்படியான வருமானம் கிடைக்கவில்லை, வருமானம் போய்விட்டது என்று கூக்குரலிடுவதில் ஏதேனும் பொருள் உளதா?

எனவே, எதற்கெடுத்தாலும் பணம் இல்லை என்ற பாட்டைப் பாடும் ஆளும் கட்சியாரின் போக்கு மக்கள் மனத்தைத் திருப்தி செய்வதாய் ஆகிவிட முடியாது. மத்திய அரசாங்கத்துக்குக்கொடுத்து விட்டு அவர்கள் கொடுக்க வில்லை என்று கூறிக்கொண்டிருக்கவும்முடியாது. நம்நாட்டுமுன்னேற்றத்தில், மக்கள் நலனில் அக்கறையில்லாதபடி, நம் நாட்டுப்பணத்தை மத்திய அரசாங்கம் பெறுவதோ, மாகாண அரசாங்கம் பெறுவதோ எந்த வகையிலும் ஒழுங்கும் நியாயமும் ஆகாது என்பதை மக்கள் தெரிந்து கொண்டு தானிருக்கின்றார்கள்.

## திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

**8—11—49**

ஈரோடு :— சி. என். அண்ணாதுரை, பி. பழனிச்சாமி, எஸ். அப்பாவு

**10—11—49**

வடுகப்பட்டி :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

## உணவுப்பெருக்கம் உயர்கிறதா?

### ‘கள்ளமார்க்கெட்டில்’ எரு விற்பனை

“நாட்டைப் பணவீக்கம் பெரிதும் வாட்டி வருகிறது டாலர்-தட்டுப்பாட்டின் நெருக்கடிகள் வேறு தொண்டையைப் பிடிக்கின்றன. இதற்கென்ன மார்க்கம் தெரியுமா? வெளிநாட்டு இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி பெருக வேண்டும். உணவுப் பெருக்க உற்பத்தி உச்ச நிலையை அடைய வேண்டும்.” என்றெல்லாம் நாடாள வந்த‘நல்லவர்கள்’ நாள்தோறும் பல்லவி பாடி வருவதைக் கேட்கிறோம். உணவு மந்திரி முதல் பாதமருள்விட்டு இலாகா இல்லாத மந்திரி ஈறாக இதனையே திருப்பித் திருப்பிக் கூறிவரக் காண்கிறோம். ஆந்திரப் பகுதிகளில் நடந்து வருவதாகத் தெரியவரும் சம்பவங்கள் சில, உணவுப் பெருக்க உற்பத்தித் திட்டத்தின் நிறைவேற்றத்தில் ஆளவந்தார்க்கு இருக்கும் அக்கறையைக் காட்டிலும் பன்மடங்கு விஞ்சிவிட்டது. அங்கத்திய உழவர்களின் ‘உண்மையான’ அக்கறை என்பதைக் காட்டுகின்றன.

ஆந்திரப் பகுதிகள் சிலவற்றைச் சேர்ந்த உழவர்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து ‘அம்மோரியம் சல் பேட்’ என்ற எருவை மூட்டை யொன்றுக்கு ரூ 45 முதல் ரூ. 50 வரை கள்ள மார்க்கெட்டில அதிக விலை கொடுத்து வாங்குகின்றனராம். இதனை கடப்பை கலெக்டரிடம் அம்மாவட்ட உணவு உற்பத்திக் கமிட்டி உறுப்பினர்கள் ஒருவர் விடாமல் புகார் கூறியிருக்கின்றனர்.

ஏன், இந்த நிலை? ‘உணவைப் பெருக்கு- உணவைப் பெருக்கு’ என்று ஆண்டு முழுதும் பாடி வரும் ஆட்சியாளர், உழவனுக்கு வேண்டிய உரப்பொருள்களை முட்டின்றி நியாயமான விலைக்குத் தரவேண்டிய பொறுப்பை உணராமற்போனதேன்? உரப்பொருள்களுக்கு, உறுதியான ஏற்பாடுகள் செய்யாதசர்க்காருக்கு அதிகஉற்பத்தியை எதிர்பார்க்க, வற்புறுத்த என்ன உரிமை, நியாயம் இருக்கிறது? இதுபோன்று முக்கியமான—கண்ட்ரோல்செய்யப்பட்ட பொருள்களைத் தனிப்பட்டோரிடம் விற்பனைக்குத் தருவதேன்? விவசாய இலாகா என்று ஒன்றிருக்கிறதே, அதன் பொறுப்பில்விட்டு,நியாயவிலைக்கு விற்க ஏற்பாடு செய்தால் எவ்வளவு கண்ணியமாயிருக்கும் விவசாய இலாகாவும் பிறகு தான் வருகிறதெனில், இந்தத் தனிப்பட்டக் கொள்ளை லாபக்காரரை வேறு ஏன் வளர்க்க வேண்டும்?

இம்மாகாணத்தில் உரப்பொருள்களில கள்ளமார்க்கட் நடக்கிறதென்றால் அதற்குப் பொறுப்பு சர்க்காரா, கொள்ளை லாபக்காரரா? வகையிருந்தால் வழியில் போவோனுக்குக்கூடத் தான் திருட்டு எண்ணம் வரும்! எனவே இங்கு எரு விற்பனையிலும் ‘கள்ள மார்க்கட்’ நடக்கிறதென்றால், அது வெட்ககரமானது, மன்னிக்கமுடியாதது!

### திரு திரு என...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தான் தென்னாட்டவர் இந்தியைக் கற்பதில் உள்ள சங்கடத்தை, இந்த சட்டசபை உறுப்பினர்களால் உணர்ந்து கொள்ள முடியும். கா. சட்டசபை உறுப்பினர்களுக்கு இந்தியில பரீட்சை வைக்கவேண்டும். பரீட்சையில் தேராதவர்களை, உறுப்பினர் பதவியிலிருந்து விரட்டவேண்டும். துணிவிருக்குமா, இவைகளைக் காரியத்தில் காட்ட டாக்டர் பட்டாபிக்கு?

சட்டசபை உறுப்பினர்களை இந்த அக்கினிப் பரீட்சையில் தேர வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தாலும் தாமதித்தாலும், காங்கிரஸ் அமைச்சர்களைப் பொறுத்த மட்டிலாவது, தாம் கூறும் கட்டாய இந்திப் பரீட்சையை உடனடியாக நிறைவேற்ற முன் வரவேண்டும் டாக்டர் பட்டாபி. அப்பொழுது தெரியும், அந்த மொழியைத் தெரிந்தவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் என்பது? இருக்கிறதா, அதற்கான நெஞ்சுரம், அனைத்து இந்திய காங்கிரஸ் தலைவரிடம்!

### ‘காலமே காட்ட வேண்டும்’

முதலமைச்சர் நேரு அமெரிக்கா சென்றிருப்பது எந்த அளவுக்கு இந்தியாவின் ‘தட்டுகெட்ட நிலையை’ அமெரிக்கா முதலீடு செய்வதற்கேற்ப பக்குவப்படுத்தியிருக்கிறதென்பதைக் காலந்தான் காட்ட வேண்டும்” என்று தோழர் ஆர். கே. சண்முகம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

# "திராவிட நாடு" ஜாமீன் கோரிக்கை எதிர்வழக்கில் வெற்றி!

## சர்க்கார் உத்தரவை ரத்து செய்து, உயர்நீதிமன்றம் தீர்ப்பு

### 'வகுப்புத் துவேஷம் ஊட்டக்கூடிய கருத்துக்கள் எவையும் காணப்படவில்லை'

### "பல்லாயிரமாண்டாய் பரவி யூன்றிவிட்ட 'ஜாதி முறை'யே கடியப்படுகிறது"

### 'மனக்குறை - துயர் களைய வழி விழைவது துவேஷமாகாது'

(0)

### "இது இயற்கை; வகுப்புத்துவேஷமென வரையறுப்பது பெருத்த அநீதி"

:(0):

### நீதிபதிகளின் தேர்ந்த தீர்ப்பு

ஒரு வகுப்பு மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்படுத்துவதற்கானத் தூண்டுகோலாக நடப்பிலிருந்து வரும் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் எடுத்துக்கூறுவது, பல்திறப்பட்ட வகுப்பாரிடையே வெறுப்புணர்ச்சியையும், பகைமை—மனப்பான்மையினையும் உண்டாக்கும் காரியமாகாது. 'பகைமை' 'வெறுப்புணர்வு' என்பவைத் தீவிரமான சொற்களாகும். கருத்து வேறுபாடுகள் நிறைந்த இவ்வுலகத்தில், ஒருவர் தனது மனக் குறையைத் தெரிவித்துக் கொள்ள பயன்படுத்தும் ஒவ்வொரு சொற்றொடரையும், துயர்களைய விழையும் ஒவ்வொரு வேண்டுகோளையும் பகைமை—வெறுப்புணர்வு ஊட்டக்கூடியன என்று குறிப்பிட முனைவது நியாயமற்றது என்பது வெளிப்படை" என்பதாகக் கடந்த 4-ந்தேதியன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் "திராவிட நாடு" ஜாமீன் தொகை கோரிக்கையை எதிர்த்து தோழர் சி. என். அண்ணாத்துரையவர்கள் தொடுத்திருந்த அப்பீலில் சர்க்கார் உத்தரவை ரத்து செய்து தீர்ப்பளித்த பிரதம நீதிபதி தோழர் பஞ்சாபகேச சாஸ்திரியும், தோழர் சந்திர ரெட்டியும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

நீதிபதிகள் மேலும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது :—

'திராவிட நாடு' இரு கட்டுரைகளையும் நாங்கள் படித்துப் பார்த்ததில் எங்களுக்குப் புலப்படுவது என்னவென்றால், சமுதாயத்தில் 'பிராமணர்கள்' உயர்ந்த நிலையை அடைய உதவிய 'பிராமணீயத்தை' அவை கண்டிக்கின்றன. அது ஜாதி முறை என்றாலும் சரி, 'பிராமணீயம்' என்றாலும் சரி. இக்கால 'பிராமணர்கள்' எதுவும் செய்துவிட்டதாகக் கட்டுரையின் எப்பகுதியிலும் ஆசிரியர் குறிப்பிடவில்லை. மேற்படி ஜாதிமுறை கடந்த பலலாயிரம் ஆண்டுகளாக மக்களிடையே பரவி, வேரூன்றிவிட்டதென்பதே ஆசிரியரின் புகாராகும். 'பிராமணர்களிடம் தனிப்பட்ட முறையில் தனக்கொன்றும் வெறுப்புணர்ச்சியோ துவேஷமோ இல்லை யென்று ஆசிரியர் அக்கட்டுரையில் தெளிவாகக் கூறியிருப்பதோடு, (ஜாதி) முறைதான் ஒழிக்கப்பட்டாகவேண்டுமென்று ஒன்றுக்குமேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளார். 'பிராமணரல்லாதாரை' பிராமணர்கள் மீது துவேஷம்—பகைமை கொண்டு ஏவிவிடும் தன்மையதான தூண்டுதலெதுவும் கட்டுரையின் எப்பகுதியிலும் இல்லவேயில்லை."

இவ்விதமாக நீதிபதிகள் தங்கள் தேர்ந்த கருத்தைத் தெரிவித்து, 'மேற்படி கட்டுரைகளில் இந்திய அவசர அதிகாரங்கள் சட்டத்தின் 4 (1) (எச்) பிரிவில் விவரிக்கப்படும் தன்மை வாய்ந்த சொற்களெவையும் அடங்கியிருக்கவில்லை. ரூ 3,000 ஜாமீன் தொகை கட்டுமாறு அப்பீல்தாரருக்குக் கட்டளையிட்டு மாகாண சர்க்கார் விதித்த உத்தரவை ரத்து செய்கிறோம்' என்று தீர்ப்பளித்தனர்.

'திராவிடநாடு' 1948 ஏப்ரல் 4, 18-ந் தேதிய இதழ்களில முறையே வெளியிடப்பெற்ற இரண்டு கட்டுரைகளைப் பொறுத்து சென்னைச் சர்க்கார் தங்களது 1949 ஜூன் 25-ந் தேதிய உத்தரவொன்றில் ரூ. 3,000 ஜாமீன் தொகை கோரியிருந்தனரென்பதைத் தோழர்கள் அறிவர். செங்கற்பட்டு மாவட்ட நீதிபதியிடம் மேற்படி ஜாமீன் தொகைகள் கட்டிவிட்டு, உயர் நீதிமன்றத்தில் தோழர் அண்ணாத்துரையவர்கள் சர்க்கார் உத்தரவை யெதிர்த்து அப்பீல் செய்துகொண்டதையும் தெரிவித்திருக்கிறோம்.

அப்பீல்தாரரின் வாதம் கடந்த வாரம் நீதிபதிகளால் கேட்கப்பட்டது. அப்பீல்தாரர் தனது வாதத்தில் மேற்படி கட்டுரைகள் இரண்டிலொன்று தோழர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் இரண்டாவது முறையாக சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையைப் பற்றியதென்றும், மற்றொன்று 'பிராமணீயத்தை'ப் பற்றியதென்றும் குறிப்பிட்டு, முதல் கட்டுரை தோழர் ஓ. பி. ஆர். தேர்தல் கடந்தவேளையில், வெளியில் நின்றிருந்த கூட்டத்தினர் "பார்ப்பனர் ஒழிக" என்று எழுப்பியக் கூச்சலைப் பற்றித் தந்துரைத்த விளக்கமாகுமென்றும், அக்கட்டுரையில் குறிப்பிட்ட வகுப்பெதையும் பற்றித் துவேஷமாக எதுவும் எழுதவில்லையென்றும் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குறிப்பிட்ட வகுப்பொன்றின் அரசியல் வாதிகளைப் பற்றிதான் சிற்சில எழுதப்பட்டனவென்றும் தெரிவித்து, இரண்டாவது கட்டுரை ஜாதி முறையைப்பற்றிய விளக்கமாகுமென்றும், 'பார்ப்பனீயத்தை' விலக்குமாறே அதில திராவிட இனத்தவர்க்கு எடுத்துரைக்கப்பட்டதென்றும், எனவே அக்கட்டுரைகளில் எந்தக் குறிப்பிட்ட வகுப்பின் மீதும் பகைமை யுணர்ச்சியைத் தூண்டிவிடும் எண்ணம் இல்லையென்றும் விளக்கினார்.

நீதிபதிகள் தங்களது தீர்ப்பில், மேற்படி கட்டுரைகளின் தன்மை பிரஸ் ஆக்டின் 4 (1) (எச்) பிரிவின கீழ் வரவில்லையென்றும், 'பிராமண' வகுப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு பிரிவினரின் போக்கை பற்றிய நீண்ட கட்டுரையே அதுவென்றும், இரண்டாவது கட்டுரையிலும் 'பிராமணரல்லாதாரை'த் தூண்டிவிடும் தன்மையில் எதுவுமில்லையென்றும் குறிப்பிட்டனர்.

நீதிபதிகள் தொடர்ந்து குறிப்பிட்டதாவது :—

"பலதிறப்பட்ட வகுப்பாரிடையே பகைமை — வெறுப்புணர்ச்சிகளை ஊட்டக்கூடிய எதுவும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்படி கட்டுரைகளில் காணப்படுகிறதாவென்பதே இப்போதைய பிரச்சினை.

"பார்ப்பனீயம்" (பிராமணீயம்") என்ற சொல்லுக்குப் பதிலாக 'ஜாதிமுறை' என்ற தொடரை ஆசிரியர் பயன்படுத்தியிருப்பாரேல் அக்கட்டுரை (1948 ஏப்ரல் 18-ந்தேதியது) அவசரச் சட்டத்தின் 4 (1) (எச்) பிரிவின்கீழ் வாராதென அட்வொகேட்-ஜெனரலே ஒத்துக்கொண்டுள்ளார்.

பிராமணீய முறை என்ற குறிப்புக் காட்டப்பட்டிருப்பதாலேயே மேற்படி ஆக்டின் கீழ் வருகிறதென அட்வொகேட்-ஜெனரல் தெரிவிக்கிறார்" இவ்வாறு நீதிபதிகள் குறிப்பிட்டு, மேலே கண்டவாறு தங்களது கருத்தைத் தெரிவித்தனர்.

"ஏவிவிடுவதோ, தூண்டிவிடுவதோ, பகையூட்டுவதோ ஆன மொழி எதுவும் கட்டுரையில் காணப்படவில்லை. 'பிராமணர்களை'த் துன்புறுத்தும் வகையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று 'பிராமணரல்லாதா'ரைத் தூண்டும் தன்மையில் ஆசிரியர் எதுவும் எழுதவில்லை யென்பதை அட்வொகேட்-ஜெனரலே ஒத்துக்கொள்கிறார்" என்று நீதிபதிகள் தொடர்ந்து குறிப்பிட்டு, மேற்கண்டவாறு தங்களது தீர்ப்பை அளித்தனர்.

---

## யார் சொல்லுவது சரி?

ரா. ச. சே. சங்கத்தினரைக் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளுவதென்று காரியக்கமிட்டி செய்தள்ள முடிவை புனராலோசனை செய்யவேண்டும் என்று மேற்கு வங்க மாகாண காங்கிரஸ் நிர்வாக சபைகேட்டுக்கொண்டிருக்கிறதாம். அதுமட்டுமின்றி, ரா. ச. சே. சங்கம் உண்மையில் ஒரு வகுப்புவாத ஸ்தாபனமே என்றும் தீர்மானம் செய்திருக்கின்றனராம்.

ரா. ச. சே. சங்கம் வகுப்புவாத ஸ்தாபனமல்ல வென்று பட்டாபிகளும் தாண்டன்களும் மூச்சுவிடாமல் பேசிவருகின்றனர். இப்படிப்பட்ட நேரத்தில்தான், மேற்கு வங்கக் காங்கிரஸ் மேற்கண்டவாறு தீர்ப்பு கூறுகிறது. இவ்வனம் காங்கிரஸ்காரர்களில் ஒருசாரார் ரா. ச. சே. சங்கத்தைக் கண்டிப்பதும், மற்றொரு சாரார் கட்டித் தழுவுதுமாக இருக்கும் இந்த விநோத காட்சிக்கு என்ன பெயரிடுவது என்பதே நமக்குப் புரியவில்லை. இந்த இருசாராரில்யார்சொல்லுவது சரி, யார் சொல்லுவது தவறு? என்று மக்கள் மயங்குகின்றனர்.

---

## சமாதான மாநாடு

நவம்பர் 24-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை கல்கத்தாவில் "அகில இந்திய சமாதானமாநாடு" ஒன்றை நடத்த அ. இ. தொழிற் சங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அ. இ. தொ. சங்கக் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களின் கூட்டு முயற்சியின் பேரில் இம்மாநாடுநடைபெறுமெனத்தெரிகிறது. இம்மாநாட்டிற்கு வருமாறு கம்யூனிஸ்ட் சீனாவின் துணைத் தலைவி தோழியர் சன்யாட்சென்னுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

---

## அரசியலார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி எழும்பூர், சென்னை

8-11-49 அன்று மாலை 3-30 மணிக்கு மாணவ ஆசிரியர்க் கழகச் சார்பில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதுபோது ஆசிரியர் தோழர் ஜே. கோபாலகிருஷ்ணன் பி. ஏ., பி. டி., தலைமை வகிப்பார். தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்கள் சொற்பொழி வாற்றுவார்கள்.

---

## இனி நடப்பவை

ஈரோடு—8-11-49 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு, காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ; அவர்கள் சொற்பொழி வாற்றுவார்.

* * *

திருப்பத்தூர்—இவ்வூர் மீனாட்சி தியேட்டரில் 13-11-49 ஞாயிறு காலை 9 மணிக்கு நகரசபைத்தலைவர், தோழர் சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் சொற்பொழி வாற்றுவார்.

* * *

வேலூர்—இவ்வூர் தி.மு. கழகக் கிளையின் சார்பாக, 13-11-49 ஞாயிறுமாலை 6மணிக்கு கோட்டை வெளியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் பேசுவார்.

* * *

கோடம்பாக்கம்— சென்னை, கோடம்பாக்கம் தி. மு. கழக உறுப்பினர்களின் கூட்டமொன்று 8-11-49 மாலை 6-மணிக்கு, ஆற்காடு ரோடு, 49-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். அதுபோது சில முக்கிய பிரச்சினைகள்பற்றி ஆலோசிக்க இருப்பதால் எல்லா உறுப்பினரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை— சென்னை 3-வது வட்டம் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 8-11-49 மாலை 7-மணிக்கு 14-கல்மண்டபம் ரோடு, தோழர் எம். ஆர். பாண்டியன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். கழக அமைப்பில் ஆர்வமுள்ள (3-வது வட்ட) தோழர்களனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை எழும்பூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 9—11—49 புதன் மாலை 7-மணிக்கு, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு 179 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் எ. எஸ். ராமன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

---

## மூவலூர் இராமாமிர்தத் தம்மையார்

தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரின் தற்கால முகவரி கீழே தரப்படுகிறது. அவர்களுக்கு அஞ்சல் வரைவோர், கீழ்க்கண்ட முகவரிக்கே எழுதக் கோரப்படுகிறார்கள்.

முகவரி:—

ஆ. இராமாமிர்தத்தம்மையார்,
15. ஏ. நேத்தாஜி தெரு,
சிதம்பரம்.

# சர்வாதிகாரத்தைச்சாடி, வைதீகத்தை வீழ்த்துவதே நம் பணி

## மந்திரிகளின் 'கோலாகல' வாழ்வுக்கு மக்கள் நலன் பலியாவதா?

### கடலூரில் தோழர்கள் சம்பத் - இளம்வழுதி

[28—10—49ல் கடலூர் புதுப்பட்டினத்தில் நடைபெற்ற தி. மு, கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களின் சொற்பொழிவுச்சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

**தில்லை வில்லாளன்**

"இன்றைய ஆண்டு அறிக்கையை நீங்கள் பார்த்திருக்கலாம். உங்கள் கண்ணோட்டத்தின் ஊடே புதிதான வார்த்தையை "முன்னேற்றம்" என்பதைக்கண்டிருப்பீர்கள். இதுவரைத் திராவிடர் கழகமே விளங்கியது. இன்று திராவிட முன்னேற்றக் கழகம் காணப்படுகிறது. அது இருக்க இது ஏன்? இரண்டும வெவ்வேறு என்ற பல சந்தேகங்கள், எண்ண அலைகள், மனப்புயல்கள் ஏற்பட்டிருக்கலாம். எங்கள் தலைவர் பெரியார் அவர்கள் திருமணமும், அதனால் ஏற்பட்ட விளைவுகளுமே இவைகள் தோன்றக காரணமாகும். அவர் சீர்திருத்தங்களுக்கு முதன் முதலாக எங்களை மணப் பந்தல்களிலே நுழையச்செய்து அங்குச் சீர்திருத்தத்தை ஏற்படச் செய்தார். அங்கெல்லாம் கண்டிக்கப்பட்ட பொருந்தாத் திருமணத்தை அவரே செய்துவிட்டார்—கொடி பிடிக்கும் குப்பன்களாயிருந்தால் பரவாயில்லை—தலைவரே பாதை தவறினர். தலைவரின் போக்கிலே மாற்றம் கண்டோம். கண்ணீர் விட்டுக் கதறினோம் அவர் மனம் கரையவில்லை. ஆகையால புதிய கழகம் கொள்கைகளை மறையாதிருக்கச் செய்ய ஏற்பட வேண்டியதாயிற்று" என்று சொல்லி சாதி வேற்றுமைகளைக் கண்டித்துப் பேசினர்.

**புலவர் திருநாவுக்கரசு**

இந்தி இந்த நாட்டில் நுழைக்கப்படுவதன் காரணத்தையும், அதனால் தமிழுக்கேற்படும் இழுக்கையும் விளக்கி அரைமணி நேரம் பேசினர்.

**இரே. இளம்வழுதி**

"இன்று நாம் புதிய கழகம் கண்டுள்ளோம நமது கொடியிலே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைக்கும் இன்றைய நிலைக்கும் நாம் எவ்வளவோ மாற்றத்தில் காணப்படுகிறோம். ஆனல் அரசாங்கத்திலோ, வாழ்க்கை முறையிலோ மாற்றம் காணோம்.

நம் மக்கள் நாட்டிலே நலிகின்றனர். பசி, பசி என்று பரதவிக்கின்றனர். சோறு சோறு என்று கூவிச் சோர்வடைகின்றனர். ஆனல் நம மந்திரிகள் கவலையின்றி திரு உலாவருகின்றனர். பிரதம மந்திரியோ அமெரிக்காவில முகஸ்துதியின் நடுவிலே மூழ்கிக்கிடக்கிறா தன புறப்பாட்டு நேரத்தையும தள்ளிப் போட்டுக்கொண்டு. மந்திரி மாதவ மேனனோ வடமொழி, சமஸ்கிருதத்தின் பெருமைகளை உரைத்து மக்களிடம் அதற்கு மதிப்புக் கொடுக்கும்படி மன்றாடப் புறப்பட்டு விட்டார்—சொந்தச் செலவிலல்ல—பராரிகளின் பணத்தைக்கொண்டு—செலவு கணக்கு எழுதிவைத்துவிட்டு உணவு உற்பத்தித் திட்டத்தைப் பற்றி மந்திரியார் பேசவில்லை. ஆனல் சமஸ்கிருதத்தின் உயர்வைப்பற்றிப பேச, பெயர் மாற்றங்களை பற்றி பல்லவி பாடி வருகிறார்.

**மந்திரிகள் கோலாகலம்!**

நீங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் பத்திரிகையைப் பார்த்திருக்கலாம—மந்திரிகளில் ஒருவர் 60 நாட்களுக்கு 22 நாட்கள் சுற்றுப் பயணத்தில் இருக்கும் கோலாகலத்தைப் பற்றி குமாரசாமிராஜாவை எடுத்துக்கொள்ளுங்கள் வானவூர்தியில் ஏறி டில்லி போனர்—ஏன்? உணவு நிலை பற்றிப் பேச பணக் குறைவு பற்றிப் பேச என்றே காண்கிறோம ஏன் அங்கே? இங்கு வரும ரயில்வே, தபால், வருமான வரி முதலியவற்றை அங்கு அனுப்பி விட்டு நாம் ஏன் அவர்களைக் கெஞ்ச வேண்டும்? சின்னாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகை நிருபர் அவரைக் கண்டு பேசினர். தாங்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும எண்ணம ஏதாவது உண்டா என்று கேட்டாராம், இப்போதிருக்கும் நிலையில் அப்படி ஒன்றும எண்ணமில்லை என்றாராம மந்திரியார்!

எட்டணு கூலிக்காரர்கள், போதாத காரணத்தால் நான்கு அணு அதிகக் கூலி கேட்டால் மட்டும் மறுப்பவர்—அந்தக் கொள்கையை சம்பளத்தில் குறைத்துக்கொள்ளும எண்ணமில்லை என்றார் இப்படி இருக்கிறது நம மந்திரிகளின நிலை. 8 அணு கூலி வாங்கும தொழிலாளி சம்பள உயர்வு கேட்டுக் கிடைக்காத போது வேலை நிறுத்தம் செய்தால அவர்களைப் பிடித்தடைத்து ஆலைக்குக்கொணர்ந்து வேலை செய்யச் சொல்லுமவர்கள்; ஒரு முதலாளி முன்னைக்கு இப்போது வருமானம் ஒரு லட்சம் குறையுமென்று கூறி அவ்வாண்டு ஆலையை மூடுவதாகக் கூறிடும்பொழுது ஒன்றும செய்யமாட்டார்கள்—செய்வதுமில்லை. ஆலைத் தொழிலாளர் 6000 பேரும். அவர் தம குடும்பம் வேலையிலலாத் திண்டாட்டத்தில் நலியுமே என்ற வருத்தம இவர்களுக்கு இருப்பதில்லை முதலாளிகளைச் சிறையிலிட்டு ஆலையைத் திறக்குமாறு ஆணையிட நெஞ்சில் உரமற்ற—நேர்மையற்ற — பணக்காரர்களின பாதந்தாங்கும அரசாங்கமாக இருக்கிறது, இது

**பணமுடை ஏற்பட்டால்......**

நாங்கள் இப்போது தேர்தல்களில் கலக்க போவதில்லை. ஆனல் எப்போதுமல்ல ஒரு சில ஆண்டுகட்குப பின்னர் கலப்போம், நாங்கள் வந்தாலும இந்த ஆட்சிதானே நாட்டில காணப்படும். இவர்கள் மட்டும பணமில்லை என்று கூறாமலா இருக்கப் போகின்றனர் என்று நீங்கள் கேட்கலாம. ஆனல் நாங்கள் மந்திரியாக ஆனல் பணமுடை ஏற்படும் பொழுது திருப்பதி போக்குவோம், அப்பன வெட்கடாசலபதியைக் கண்டு மக்கள் குறையை உரைத்து அவர் சொத்துக்களைக்கேட்டு அவர் பெயரிலேயே — வேண்டுமானல். அவர் திருக்கோலத்தை கண்ணடியிட்டு அந்தப் பணத்தைச் செலவிடுவோம். மகன் கஷ்டப்பட தந்தை காணச்சகியார். சிதம்பரத்திலும் அம்மாதிரியே செய்வோம்—தந்தை மறுத்தாலும் தாயிடம பணம கேட்போம். தாய மறுக்க மாட்டாள். பச்சைக்கல மூக்குத்தி கிடைக்கும அவர்கள பேசாப்பிறவிகளாதலால் நாங்கள் எங்கள் பணமுடைகளை நீக்கிக்கொள்வோம்." என்றுசுமார் 1 மணி நேரத்திற்குமேல பேசினர்

**ஈ. வெ. கி. சம்பத்**

"தி. மு. க. இன்றைய அரசாங்கத்தின போக்கினையும். சர்வாதிகாரத்தையும், வைதீகர்களின் வர்ணாஸ்ரமப் போக்கையும கண்டிக்கவே தோன்றியுள்ளது உலகத்திலேயுள்ள நாடுகளிலே ஒவ்வொரு நாட்டிலும சர்வாதிகாரம் தோன்றிதான் இருந்தன. சர்வாதிகாரிகளாக இருந்த பலரும அடக்குமுறை ஆயுதத்தை மக்களின மேல் வீசி, அவர்கள் ஆட்சி நிலைக்கச் செய்ய வேண்டி அரும்பாடுபட்டு வந்த ரஷ்யஜார், ஜெர்மன் ஹிட்லர், இத்தாலி முசோலினி, பிரான்ஸ் லூயிகளின் நிலைமை என்கதியாயிற்று என்று சரித்திரம சான்று கூறுகிறது. இவ்வளவு சான்றுகளையும கற்றுணர்ந்த இன்றைய ஆட்சியாளர் அதே போக்கினைக் கொண்டு தங்கள் ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ள எண்ணுவார்களேயானல் அவர்களை அவர்களே ஏமாற்றிக்கொண்டவர்களாகவே—சீன கியாங்கின முடிவையே அடைவார்களேயொழிய, அவர்களின் ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது.

**எங்கு கொண்டு சேர்க்கும்?**

மக்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறினல் பணமில்லை! பணமில்லை என்ற பஞ்ச பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தால்—மேலும் மேலும் எப்படி நாட்டைச் சுரண்டலாம், கொள்ளையடிக்கலாம் என்ற வழியிலே போய்க்கொண்டிருந்தால்-அன்று ஆட்சி செய்த வெள்ளை ஏகாதிபத்தியம் சலுகைத்தருவாயில் 55 கோடி ரூபாய் மூலதனம் வைத்துப் போனதையும இழித்துவிட்டு, இன்று அன்னக்காவடி அரசாங்கமாக ஆக்கிவிட்டால இந்த ஆட்சி நம நாட்டைச் சிறிது காலத்தில எந்த நிலையில் கொண்டு போய்விடுமெனபதை யோசித்துப் பாருங்கள்.

அன்றே எங்களுக்குத் தெரியும் இந்த அரசாங்க நிலை. டிக் கொள்ளைக்காரர்கள் தங் வேலையைத் துவங்கும் நேரத்திலே, 12 மணி வேளையிலே நள்ளிரவிலே ஆட்சிப பீடம் ஏறுவதென்றால் அதுஎப்படிப்பட்ட அரசாங்கமாக இருக்கும். புராண காலத்திலேகூட எந்த அரசனும் சூரியன் உதித்த பிறகே, பட்டப் பகலில் ஆட்சி ஏற்றுக்கொண்டான் என்று கூறுகிறது. நல்லிரவில் ஏற்றுக்கொண்டதாக எந்த வரலாறும் கூறவில்லை இன்றைய விசித்திர ஆட்சிப் பீடத்தார் நீங்கலாக.

மக்கள் இன்னல்களை நீக்க திட்டமிலலாவிட்டால், மக்களின் நலிந்த வாழ்வை நீக்கப் பாடுபடும் பத்திரிகைகளுக்குப் பரிசு, ஜாமீன், பறிமுதல்; அடிப்படை உரிமைகளை எடுத்துச் சொன்னல 144 ஊர்வலத்திற்குத் தடை, புத்தகங்களுக்குப் பறிமுதல், அச்சிடுவோருக்கு அபராதம் ஆயிரக்கணக்கில். நாடகங்களுக்கு நடிக்கத் தடை முதலியவைகள் விதித்துக் கொண்டே போனல், இந்த ஆளுகை எத்தனை நாளைக்கு நிலைத்து நீடிக்கும? சாதாரணமாக ஒரு மணி நேரத்துப் பேச்சுக்கு அழிந்து போகும் ஆட்சி, 40 பக்கம் கொண்ட புத்தகத்திற்கு அழிந்துபோகும ஆட்சி, அரிதாரம் பூசிக்கொண்டு ஆடும் இரண்டு மணி நேர நாடகத்திற்கு அழிந்துபோகும் ஆட்சி எத்தனை நாளைக்கு மானத்துடன் வாழ முடியும? எத்தனை நாள் மக்கள் மானமிழந்து இருக்க முடியும்.

**எது ஜனநாயகம்?**

ஒழுக்கமுள்ள ஆட்சியாய் இருந்தால், நேர்மையுள்ள அரசாங்கமாக இருந்தால் எங்களுடைய பிரசாரங்களுக்கும் புத்தகங்களுக்கும் தடை போடாமலும், ஜாமீன் கேட்காமலும், பறிமுதல் செய்யாமலும் அவர்கள் தங்கள் கருத்தை, வேலையை, திட்டத்தை எடுத்துக் கூறுவது தானே ஜனநாயக முறை இவைகளை நாங்கள் எடுத்துச் சொன்னல் வெள்ளையர் பூட்ஸ் நக்கிகள், தேசத் துரோகிகள் என்று கூறிவிட்டால் மக்கள் குறை நீங்கி விடுமா? அவர்கள் இந்த நாட்டு மன்னர்கள் ஆகிவிட முடியுமா?

காமராஜர் செல்லுமிடங்களில் எலலாம் மக்கள் கூட்டத்தில் பேசவில்லை, போலீஸ் தோழர்களின் நடுவிலே பேசுகிறார். மக்கள் கேள்விகள் கேட்கா வண்ணம் போலீஸ் வேலி. ரோம சரித்திரக் கதை ஒன்று நீரோ மன்னன் பாடப் பிரியமுள்ளவன் குரலோ கழுதையின குரல போன்றது. அவன் திடீரென்று கடைத்தெரு சென்று மக்கள் கூட்டத்தைப்போலீஸ் உதவியால் மடக்கி ஒரு இடத்தில் கொண்டுவந்து பாடுவானும். ஜனங்கள் பிடிக்காது வெளியேறினல் அவர்களின் தலை உருளுமாம். அம்மாதிரியுள்ளது காமராஜர்களின் போக்கும். கம்யூனிஸ்ட் தோழர்களை அடக்கும் போக்கும், சமீபத்திலே தஞ்சை மாவட்டத்து களப்பாடு என்ற கிராமத்திலே 8000 பேர் கொண்ட உழவர் கூட்டத்தை மலபார் போலீஸ் உதவியால் அடித்து, நையப்புடைத்து, பட்டப் பகலிலேயே உழவர் பெண்களை துன்புறுத்தினர் என்ற செய்தி; கடலூர் மத்திய சிறையிலே மேலும் இரு கம்யூனிஸ்டுகள் உயிர் பலி என்ற செய்தி இவற்றைக் கொண்டு இவர்கள் வெள்ளையரோடு பிரஜா உரிமைக்கும், பேச்சு, எழுத்து சுதந்திரத்திற்கும போராடியவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. செய்வதில ஒன்றையும் காணோமே!" என்று சொல்லி எல்லோரையும் தி மு கவில் சேருமாறு பின்னர் கேட்டுக் கொண்டு சுமார் 1½ மணி நேரம் பேசினர். தலைவர் நன்றி கூறலுடன் கூட்டம இனிது முடிந்தது. (வ-உ)

## ஆதிக்கக் கருவி!

ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆதிக்கப்படுத்தி அட்டிப்படைக்க விரும்பிய போதெல்லாம் அது செய்த முதல் காரியம, தான் ஆதிக்கப்படுத்த விழையுமநாட்டின் மொழியையும கலாச்சாரத்தையும் சிதைத்து சீரழித்து தன்னால் ஆட்படுத்திக்கொள்ளப்பட்ட அந்நாட்டு மக்கள் மீது தனது சொந்த மொழியைப்புகுத்தியதே யாகுமென்பதை உலக வரலாற்று ஏடுகள் எடுத்துக் கூறுகின்றன. ஜார்மன்னன ஆட்சியின் கீழ் போலந்து உற்றநிலையும அதுதான்.

—ஆர். கே. சண்முகம
சென்னை, 5—11—49

## பூனவில் ரேடியோ ஆராய்ச்சி

### புதியசோதனை நிலையம் நிறுவப்படும்

ரேடியோ எஞ்சினியரிங் கலையில் அழுத்தமான ஆழ்ந்த ஆராய்ச்சி வேலை விரைவில் பூனவில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. பூனவிலுள்ள எஞ்சினியரிங் கல்லூரியொன்றில் நவீனமுறை ரேடியோ சோதனைத் தொழிற்சாலை (லேபோரேட்டரி) ஒன்று நிறுவப்படுமெனத் தெரிகிறது. மூன்றடுக்கு மெத்தை கொண்ட கட்டிடமொன்றுடன் ரூ. 2 லட்சம பெறுமான சோதனைக் கருவிசாமான்களுடன் 1950 ஜூனில் வேலை தொடங்குமெனக் கூறப்படுகிறது. இதை யொத்த இரு நிலையங்கள் இப்போது பங்களூரிலும், சென்னையிலும் உள்ளன.

# "திராவிட நாடு" ஜாமீன் கோரிக்கை எதிர்வழக்கில் வெற்றி!

## சர்க்கார் உத்தரவை ரத்து செய்து, உயர்நீதிமன்றம் தீர்ப்பு

### 'வகுப்புத் துவேஷம் ஊட்டக்கூடிய கருத்துக்கள் எவையும் காணப்படவில்லை'

### "பல்லாயிரமாண்டாய் பரவி யூன்றிவிட்ட 'ஜாதி முறை'யே கடியப்படுகிறது"

### 'மனக்குறை - துயர் களைய வழி விழைவது துவேஷமாகாது'

—(0)—

### "இது இயற்கை; வகுப்புத்துவேஷமென வரையறுப்பது பெருத்த அநீதி"

—:(0):—

### நீதிபதிகளின் தேர்ந்த தீர்ப்பு

ஒரு வகுப்பு மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்படுத்துவதற்கானத் தூண்டுகோலாக நடப்பிலிருந்து வரும் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் எடுத்துக்கூறுவது, பல்திறப்பட்ட வகுப்பாரிடையே வெறுப்புணர்ச்சியையும், பகைமை—மனப்பான்மையினையும் உண்டாக்கும் காரியமாகாது. 'பகைமை' 'வெறுப்புணர்வு' என்பவைத் தீவிரமான சொற்களாகும். கருத்து வேறுபாடுகள் நிறைந்த இவ்வுலகத்தில், ஒருவர் தனது மனக் குறையைத் தெரிவித்துக் கொள்ள பயன்படுத்தும் ஒவ்வொரு சொற்றொடரையும், துயர்களைய விழையும் ஒவ்வொரு வேண்டுகோளையும் பகைமை—வெறுப்புணர்வு ஊட்டக்கூடியன என்று குறிப்பிட முனைவது நியாயமற்றது என்பது வெளிப்படை" என்பதாகக் கடந்த 4-ந்தேதியன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் "திராவிட நாடு" ஜாமீன் தொகை கோரிக்கையை எதிர்த்து தோழர் சி. என். அண்ணாத்துரையவர்கள் தொடுத்திருந்த அப்பீலில் சர்க்கார் உத்தரவை ரத்து செய்து தீர்ப்பளித்த பிரதம நீதிபதி தோழர் பஞ்சாபகேச சாஸ்திரியும், தோழர் சந்திர ரெட்டியும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

நீதிபதிகள் மேலும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது :—

'திராவிட நாடு' இரு கட்டுரைகளையும் நாங்கள் படித்துப் பார்த்ததில் எங்களுக்குப் புலப்படுவது என்னவென்றால், சமுதாயத்தில் 'பிராமணர்கள்' உயர்ந்த நிலையை அடைய உதவிய 'பிராமணீயத்தை' அவை கண்டிக்கின்றன. அது ஜாதி முறை என்றாலும் சரி, 'பிராமணீயம்' என்றாலும் சரி. இக்கால 'பிராமணர்கள்' எதுவும் செய்துவிட்டதாகக் கட்டுரையின் எப்பகுதியிலும் ஆசிரியர் குறிப்பிடவில்லை. மேற்படி ஜாதிமுறை கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களிடையே பரவி, வேரூன்றிவிட்டதென்பதே ஆசிரியரின் புகாராகும். 'பிராமணர்களிடம் தனிப்பட்ட முறையில் தனக்கொன்றும் வெறுப்புணர்ச்சியோ துவேஷமோ இல்லை யென்று ஆசிரியர் அக்கட்டுரையில் தெளிவாகக் கூறியிருப்பதோடு, (ஜாதி) முறைதான் ஒழிக்கப்பட்டாகவேண்டுமென்று ஒன்றுக்குமேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளார். 'பிராமணரல்லாதாரை' பிராமணர்கள் மீது துவேஷம்—பகைமை கொண்டு ஏவிவிடும் தன்மையதான தூண்டுதலெதுவும் கட்டுரையின் எப்பகுதியிலும் இல்லவேயில்லை."

இவ்விதமாக நீதிபதிகள் தங்கள் தேர்ந்த கருத்தைத் தெரிவித்து, 'மேற்படி கட்டுரைகளில், இந்திய அவசர அதிகாரங்கள் சட்டத்தின் 4(1) (எச்) பிரிவில் விவரிக்கப்படும் தன்மை வாய்ந்த சொற்களெவையும் அடங்கியிருக்கவில்லை. ரூ 3,000 ஜாமீன் தொகை கட்டுமாறு அப்பீல்தாரருக்குக் கட்டளையிட்டு மாகாண சர்க்கார் விதித்த உத்தரவை ரத்து செய்கிறோம்" என்று தீர்ப்பளித்தனர்.

'திராவிடநாடு' 1948 ஏப்ரல் 4, 18-ந் தேதிய இதழ்களில் முறையே வெளியிடப்பெற்ற இரண்டு கட்டுரைகளைப் பொறுத்து சென்னைச் சர்க்கார் தங்களது 1949 ஜூன் 25-ந் தேதிய உத்தரவொன்றில் ரூ. 3,000 ஜாமீன் தொகை கோரியிருந்தனரென்பதைத் தோழர்கள் அறிவர். செங்கற்பட்டு மாவட்ட நீதிபதியிடம் மேற்படி ஜாமீன் தொகைகள் கட்டிவிட்டு, உயர் நீதிமன்றத்தில் தோழர் அண்ணாத்துரையவர்கள் சர்க்கார் உத்தரவை யெதிர்த்து அப்பீல் செய்துகொண்டதையும் தெரிவித்திருக்கிறோம்.

அப்பீல்தாரரின் வாதம் கடந்த வாரம் நீதிபதிகளால் கேட்கப்பட்டது. அப்பீல்தாரர் தனது வாதத்தில் மேற்படி கட்டுரைகள் இரண்டிலொன்று தோழர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் இரண்டாவது முறையாக சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையைப் பற்றியதென்றும், மற்றொன்று 'பிராமணீயத்தை'ப் பற்றியதென்றும் குறிப்பிட்டு, முதல் கட்டுரை தோழர் ஓ. பி. ஆர். தேர்தல் நடந்தவேளையில், வெளியில் நின்றிருந்த கூட்டத்தினர் "பார்ப்பனர் ஒழிக" என்று எழுப்பியக் கூச்சலைப் பற்றித் தந்துரைத்த விளக்கமாகுமென்றும், அக்கட்டுரையில் குறிப்பிட்ட வகுப்பெதையும் பற்றித் துவேஷமாக எதுவும் எழுதவில்லையென்றும் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குறிப்பிட்ட வகுப்பொன்றின் அரசியல் வாதிகளைப் பற்றிதான் சிற்சில எழுதப்பட்டனவென்றும் தெரிவித்து, இரண்டாவது கட்டுரை ஜாதி முறையைப்பற்றிய விளக்கமாகுமென்றும், 'பார்ப்பனீயத்தை' விலக்குமாறே அதில் திராவிட இனத்தவர்க்கு எடுத்துரைக்கப்பட்டதென்றும், எனவே அக்கட்டுரைகளில் எந்தக் குறிப்பிட்ட வகுப்பின் மீதும் பகைமை யுணர்ச்சியைத் தூண்டிவிடும் எண்ணம் இல்லையென்றும் விளக்கினர்.

நீதிபதிகள் தங்களது தீர்ப்பில், மேற்படி கட்டுரைகளின் தன்மை பிரஸ் ஆக்டின் 4 (1) (எச்) பிரிவின் கீழ் வரவில்லையென்றும், 'பிராமண' வகுப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு பிரிவினரின் போக்கை பற்றிய நீண்ட கட்டுரையே அதுவென்றும், இரண்டாவது கட்டுரையிலும் 'பிராமணரல்லாதாரை'த் தூண்டிவிடும் தன்மையில் எதுவுமில்லையென்றும் குறிப்பிட்டனர்.

நீதிபதிகள் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"பலதிறப்பட்ட வகுப்பாரிடையே பகைமை — வெறுப்புணர்ச்சிகளை ஊட்டக்கூடிய எதுவும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்படி கட்டுரைகளில் காணப்படுகிறதாவென்பதே இப்போதைய பிரச்சினை.

"பார்ப்பனீயம்" (பிராமணீயம்") என்ற சொல்லுக்குப் பதிலாக 'ஜாதிமுறை' என்ற தொடரை ஆசிரியர் பயன்படுத்தியிருப்பாரேல் அக்கட்டுரை (1948 ஏப்ரல் 18-ந்தேதியது) அவசரச் சட்டத்தின் 4 (1) (எச்) பிரிவின்கீழ் வாராதென அட்வொகேட்-ஜெனரலே ஒத்துக்கொண்டுள்ளார்.

பிராமணீய முறை என்ற குறிப்புக் காட்டப்பட்டிருப்பதாலேயே மேற்படி ஆக்டின் கீழ் வருகிறதென அட்வொகேட்-ஜெனரல் தெரிவிக்கிறார்" இவ்வாறு நீதிபதிகள் குறிப்பிட்டு, மேலே கண்டவாறு தங்களது கருத்தைத் தெரிவித்தனர்.

"ஏவிவிடுவதோ, தூண்டிவிடுவதோ, பகையூட்டுவதோ ஆன மொழி யெதுவும் கட்டுரையில் காணப்படவில்லை. 'பிராமணர்களை'த் துன்புறுத்தும் வகையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று 'பிராமணரல்லாதா'ரைத் தூண்டும் தன்மையில் ஆசிரியர் எதுவும் எழுதவில்லை யென்பதை அட்வொகேட்-ஜெனரலே ஒத்துக்கொள்கிறார்" என்று நீதிபதிகள் தொடர்ந்து குறிப்பிட்டு, மேற்கண்டவாறு தங்களது தீர்ப்பை அளித்தனர்.

---

## யார் சொல்லுவது சரி?

ரா. சு. சே. சங்கத்தினரைக் காங்கிரஸில் சேர்த்துக் கொள்ளுவதென்று காரியக்கமிட்டி செய்திருந்த முடிவை புனராலோசனை செய்யவேண்டும் என்று மேற்கு வங்க மாகாண காங்கிரஸ் நிர்வாக சபைகேட்டுக்கொண்டிருக்கிறதாம். அதுமட்டுமின்றி, ரா. சு. சே. சங்கம் உண்மையில் ஒரு வகுப்புவாத ஸ்தாபனமே என்றும் தீர்மானம் செய்திருக்கின்றனராம்.

ரா. சு. சே. சங்கம் வகுப்புவாத ஸ்தாபனமல்லவென்று பட்டாபிகளும் தாண்டன்களும் மூச்சுவிடாமல் பேசிவருகின்றனர். இப்படிப்பட்ட நேரத்தில்தான், மேற்கு வங்கக் காங்கிரஸ் மேற்கண்டவாறு தீர்ப்பு கூறுகிறது. இதனைக் காங்கிரஸ்காரர்களில் ஒருசாரார் ரா. சு. சே. சங்கத்தைக் கண்டிப்பதும், மற்றொரு சாரார் கட்டித் தழுவுவதுமாக இருக்கும் இந்த விநோத காட்சிக்கு என்ன பெயரிடுவது என்பதே நமக்குப் புரியவில்லை. இந்த இருசாராரில்யார்சொல்லுவது சரி, யார் சொல்லுவது தவறு? என்று மக்கள் மயங்குகின்றனர்.

---

## சமாதான மாநாடு

நவம்பர் 24-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை கல்கத்தாவில் "அகில இந்திய சமாதானமாநாடு" ஒன்றை நடத்த அ. இ. தொழிற் சங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அ. இ. தொ. சங்கக் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களின் கூட்டு முயற்சியின் பேரில் இம்மாநாடுநடைபெறுமெனத்தெரிகிறது. இம்மாநாட்டிற்கு வருமாறு கம்யூனிஸ்ட் சீனாவின் துணைத் தலைவி தோழியர் சன்யாட்சென்னுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

---

### அரசியலார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி எழும்பூர், சென்னை

8-11-49 அன்று மாலை 3-30 மணிக்கு மாணவ ஆசிரியர்க் கழகச் சார்பில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதுபோது ஆசிரியர் தோழர் ஜே. கோபாலகிருஷ்ணன் பி. ஏ., பி. டி., தலைமை வகிப்பார். தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## இனி நடப்பவை

ஈரோடு—8-11-49 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு, காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ; அவர்கள் சொற்பொழி வாற்றுவார்.

* * *

திருப்பத்தூர்—இவ்வூர் மீனாட்சி தியேட்டரில் 13-11-49 ஞாயிறு காலை 9 மணிக்கு நகரசபைத்தலைவர், தோழர் சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் சொற்பொழி வாற்றுவார்.

* * *

வேலூர்—இவ்வூர் தி.மு. கழகக் கிளையின் சார்பாக, 13-11-49 ஞாயிறுமாலை 6மணிக்கு கோட்டை வெளியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் பேசுவார்.

* * *

கோடம்பாக்கம்—சென்னை, கோடம்பாக்கம் தி. மு. கழக உறுப்பினர்களின் கூட்டமொன்று 8-11-49 மாலை 6-மணிக்கு, ஆற்காடு ரோடு, 49-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். அதுபோது சில முக்கிய பிரச்சினைகள்பற்றி ஆலோசிக்க இருப்பதால் எல்லா உறுப்பினரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை 3-வது வட்டம் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 8-11-49 மாலை 7-மணிக்கு 14-கல்மண்டபம் ரோடு, தோழர் எம். ஆர். பாண்டியன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். கழக அமைப்பில் ஆர்வமுள்ள (3-வது வட்ட) தோழர்களனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை எழும்பூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 9—11—49 புதன் மாலை 7-மணிக்கு, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு 179 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் ஏ. எஸ். ராமன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் தவறாது அழைக்கப்படுகிறார்கள்.

---

## மூவலூர் இராமாமிர்தத் தம்மையார்

தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரின் தற்கால முகவரி கீழே தரப்படுகிறது. அவர்களுக்கு அஞ்சல் வரைவோர், கீழ்க்கண்ட முகவரிக்கே எழுதக் கோரப்படுகிறார்கள்.

முகவரி:—

ஆ. இராமாமிர்தத்தம்மையார்,
15. ஏ. நேதாஜி தெரு,
சிதம்பரம்.

# சர்வாதிகாரத்தைச்சாடி, வைதீகத்தை வீழ்த்துவதே நம் பணி

## மந்திரிகளின் 'கோலாகல' வாழ்வுக்கு மக்கள் நலன் பலியாவதா?

### கடலூரில் தோழர்கள் சம்பத் - இளம்வழுதி

[28—10—49ல் கடலூர் புதுப்பட்டினத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களின் சொற்பொழிவுச்சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

**தில்லை வில்லாளன்**

"இன்றைய ஆண்டு அறிக்கையை நீங்கள் பார்த்திருக்கலாம். உங்கள் கண்ணோட்டத்தின் ஊடே புதிதான வார்த்தையை "முன்னேற்றம்" என்பதைக்கண்டிருப்பீர்கள். இதுவரைத் திராவிடர் கழகமே விளங்கியது. இன்று திராவிட முன்னேற்றக் கழகம் காணப்படுகிறது. அது இருக்க இது ஏன்? இரண்டும் வெவ்வேறு என்ற பல சந்தேகங்கள், எண்ண அலைகள், மனப்புயல்கள் ஏற்பட்டிருக்கலாம். எங்கள் தலைவர் பெரியார் அவர்கள் திருமணமும், அதனால் ஏற்பட்ட விளைவுகளுமே இவைகள் தோன்றக் காரணமாகும். அவர் சீர்திருத்தங்களுக்கு முதன் முதலாக எங்களை மணப் பந்தல்களிலே நுழையச் செய்து அங்குச் சீர்திருத்தத்தை ஏற்படச் செய்தார். அங்கெல்லாம் கண்டிக்கப்பட்ட பொருந்தாத் திருமணத்தை அவரே செய்துவிட்டார்—கொடி பிடிக்கும் குப்பன்களாயிருந்தால் பரவாயில்லை—தலைவரே பாதை தவறினார். தலைவரின் போக்கிலே மாற்றம் கண்டோம். கண்ணீர் விட்டுக் கதறினோம். அவர் மனம் கரையவில்லை. ஆகையால் புதிய கழகம் கொள்கைகளை மறையாதிருக்கச் செய்ய ஏற்பட வேண்டியதாயிற்று" என்று சொல்லி சாதி வேற்றுமைகளைக் கண்டித்துப் பேசினார்.

**புலவர் திருநாவுக்கரசு**

இந்தி இந்த நாட்டில் நுழைக்கப்படுவதன் காரணத்தையும், அதனால் தமிழுக்கேற்படும் இழுக்கையும் விளக்கி அரைமணி நேரம் பேசினார்.

**இரே. இளம்வழுதி**

"இன்று நாம் புதிய கழகம் கண்டுள்ளோம். நமது கொடியிலே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைக்கும் இன்றைய நிலைக்கும் நாம் எவ்வளவோ மாற்றத்தில் காணப்படுகிறோம். ஆனால் அரசாங்கத்திலோ, வாழ்க்கை முறையிலோ மாற்றம் காணோம்.

நம் மக்கள் நாட்டிலே நலிகின்றனர். பசி, பசி என்று பரதவிக்கின்றனர். சோறு சோறு என்று கூவிச் சோர்வடைகின்றனர். ஆனால் நம் மந்திரிகள் கவலையின்றி திரு உலா வருகின்றனர். பிரதம மந்திரியோ அமெரிக்காவில் முகஸ்துதியின் நடுவிலே மூழ்கிக்கிடக்கிறார் தன் புறப்பாட்டு நேரத்தையும் தள்ளிப் போட்டுக்கொண்டு. மந்திரி மாதவ மேனனோ வடமொழி, சமஸ்கிருதத்தின் பெருமைகளை உரைத்து மக்களிடம் அதற்கு மதிப்புக் கொடுக்கும்படி மன்றாடப் புறப்பட்டு விட்டார்—சொந்தச் செலவிலல்ல—பராரிகளின் பணத்தைக்கொண்டு—செலவு கணக்கு எழுதிவைத்துவிட்டு. உணவு உற்பத்தித் திட்டத்தைப் பற்றி மந்திரியார் பேசவில்லை. ஆனால் சமஸ்கிருதத்தின் உயர்வைப்பற்றிப் பேச, பெயர் மாற்றங்களை பற்றி பல்லவி பாடி வருகிறார்.

**மந்திரிகள் கோலாகலம்!**

நீங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் பத்திரிகையைப் பார்த்திருக்கலாம்—மந்திரிகளில் ஒருவர் 30 நாட்டுகளுக்கு 22 நாட்கள் சுற்றுப் பயணத்தில் இருக்கும் கோலாகலத்தைப் பற்றி குமாரசாமிராஜாவை எடுத்துக்கொள்ளுங்கள் வானவூர்தியில் ஏறி டில்லி போனார்—ஏன்? உணவு நிலை பற்றிப் பேச பணக் குறைவு பற்றிப் பேச என்றே காண்கிறோம் ஏன் அங்கே? இங்கு வரும் ரயில்வே, தபால், வருமான வரி முதலியவற்றை அங்கு அனுப்பி விட்டு நாம் ஏன் அவர்களைக் கெஞ்ச வேண்டும்? சின்னாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகை நிருபர் அவரைக் கண்டு பேசினார். தாங்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும் எண்ணம் ஏதாவது உண்டா என்று கேட்டாராம். இப்போதிருக்கும் நிலையில் அப்படி ஒன்றும் எண்ணமில்லை என்றாராம் மந்திரியார்!

எட்டணா கூலிக்காரர்கள், போதாத காரணத்தால் நான்கு அணா அதிகக் கூலி கேட்டால் மட்டும் மறுப்பவர்—அந்தக் கொள்ளைச் சம்பளத்தில் குறைத்துக்கொள்ளும் எண்ணமில்லை என்றார் இப்படி இருக்கிறது நம் மந்திரிகளின் நிலை. 8 அணா கூலி வாங்கும் தொழிலாளி சம்பள உயர்வு கேட்டுக் கிடைக்காத போது வேலை நிறுத்தம் செய்ததால் அவர்களைப் பிடித்தடைத்து ஆலைக்குக்கொணர்ந்து வேலை செய்யச் சொல்லுமவர்கள்; ஒரு முதலாளி முன்னைக்கு இப்போது வருமானம் ஒரு லட்சம் குறையுமென்று கூறி அவ்வாண்டு ஆலையை மூடுவதாகக் கூறிடும்பொழுது ஒன்றும் செய்யமாட்டார்கள்—செய்வதுமில்லை. ஆலைத் தொழிலாளர் 6000 பேரும், அவர் தம் குடும்பமும் வேலையிலாத் திண்டாட்டத்தில் நலியுமே என்ற வருத்தம் இவர்களுக்கு இருப்பதில்லை. முதலாளிகளைச் சிறையிலிட்டு ஆலையைத் திறக்குமாறு ஆணையிட நெஞ்சில் உரமற்ற—நேர்மையற்ற — பணக்காரர்களின் பாதந்தாங்கும் சர்க்காராக இருக்கிறது. இது

**பணமுடை ஏற்பட்டால்......**

நாங்கள் இப்போது தேர்தல்களில் கலக்க போவதில்லை. ஆனால் எப்போதுமல்ல ஒரு சில ஆண்டுகட்குப் பின்னர் கலப்போம். நாங்கள் வந்தாலும் இதே ஆட்சிதானே நாட்டில் காணப்படும். இவர்கள் மட்டும் பணமில்லை என்று கூறாமலா இருக்கப் போகின்றனர் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நாங்கள் மந்திரியாக ஆனால் பணமுடை ஏற்படும் பொழுது திருப்பதி போக்குவோம். அப்பன் வெங்கடாசலபதியைக் கண்டு மக்கள் குறையை உரைத்து அவர் சொத்துக்களைக்கேட்டு அவர் பெயரிலேயே — வேண்டுமானால், அவர் திருக்கோலத்தை கண்ணடியிட்டு அந்தப் பணத்தைச் செலவிடுவோம். மகன் கஷ்டப்பட தந்தை காணச் சகியார். சிதம்பரத்திலும் அம்மாதிரியே செய்வோம்—தந்தை மறுத்தாலும் தாயிடம் பணம் கேட்போம். தாய் மறுக்க மாட்டாள். பச்சைக்கல் மூக்குத்தி கிடைக்கும் அவர்கள் பேசாப்பிறவிகளாதலால் நாங்கள் எங்கள் பணமுடைகளை நீக்கிக்கொள்வோம்." என்றுசுமார் 1 மணி நேரத்திற்குமேல் பேசினார்.

**ஈ. வெ. கி. சம்பத்**

"தி. மு. க. இன்றைய அரசாங்கத்தின் போக்கினையும், சர்வாதிகாரத்தையும், வைதீகர்களின் வர்ணாஸ்ரமப் போக்கையும் கண்டிக்கவே தோன்றியுள்ளது. உலகத்திலேயுள்ள நாடுகளிலே ஒவ்வொரு நாட்டிலும் சர்வாதிகாரம் தோன்றித்தான் இருந்தன. சர்வாதிகாரிகளாக இருந்த பலரும் அடக்குமுறை ஆயுதத்தை மக்களின் மேல் வீசி, அவர்கள் ஆட்சி நிலைக்கச் செய்ய வேண்டி அரும்பாடுபட்டு வந்த ரஷ்யஜார், ஜெர்மன் ஹிட்லர், இத்தாலி முசோலினி, பிரான்ஸ் லூயிகளின் நிலைமை என்னவாயிற்று என்று சரித்திரம் சான்று கூறுகிறது. இவ்வளவு சான்றுகளையும் கற்றுணர்ந்த இன்றைய ஆட்சியாளர் அதே போக்கினைக் கொண்டு தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள எண்ணுவார்களேயானால் அவர்களை அவர்களே ஏமாற்றிக்கொண்டவர்களாகவே—சீன கியாங்கின் முடிவையே அடைவார்களேயொழிய, அவர்களின் ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது.

**எங்கு கொண்டு சேர்க்கும்?**

மக்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறினால் பணமில்லை! பணமில்லை என்று பஞ்சப் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தால்—மேலும் மேலும் எப்படி நாட்டை [illegible] கொள்ளையடிக்கலாம் என்ற வழியிலே போய்க்கொண்டிருந்தால்—அன்று ஆட்சிசெய்த வெள்ளை ஏகாதிபத்தியம் சலவுந்தருவாயில் 55 கோடி ரூபாய் மூலதனம் வைத்துப் போனதையும் இழித்துவிட்டு இன்று அன்னக்காவடி அரசாங்கமாக ஆக்கிவிட்டால் இந்த ஆட்சி நம் நாட்டைச் சிறிது காலத்தில் எந்த நிலையில் கொண்டு போய்விடும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அன்றே எங்களுக்குத் தெரியும் இந்த அரசாங்கம் திவட்டிக் கொள்ளைக்காரர்கள் தங்கள் வேலையைத் துவங்கும் நேரத்திலே. 12 மணி வேளையிலே நள்ளிரவிலே ஆட்சிப் பீடம் ஏறுவதென்றால் அதுஎப்படிப்பட்ட அரசாங்கமாக இருக்கும். புராண காலத்திலேகூட எந்த அரசனும் சூரியன் உதித்த பிறகே, பட்டப் பகலில் ஆட்சி ஏற்றுக்கொண்டான் என்று கூறுகிறது. நள்ளிரவில் ஏற்றுக்கொண்டதாக எந்த வரலாறும் கூறவில்லை இன்றைய விசித்திர ஆட்சிப் பீடத்தார் நீங்கலாக.

மக்கள் இன்னல்களை நீக்கத் திட்டமில்லாவிட்டால், மக்களின் நலிந்த வாழ்வை நீக்கப் பாடுபடும் பத்திரிகைகளுக்குப் பரிசு, ஜாமீன், பறிமுதல்; அடிப்படை உரிமைகளை எடுத்துச் சொன்னால் 144, ஊர்வலத்திற்குத் தடை, புத்தகங்களுக்குப் பறிமுதல், அச்சிடுவோருக்கு அபராதம் ஆயிரக்கணக்கில். நாடகங்களுக்கு நடிக்கத் தடை முதலியவைகள் விதித்துக் கொண்டே போனால், இந்த ஆளுகை எத்தனை நாளைக்கு நிலைத்து நீடிக்கும்? சாதாரணமாக ஒரு மணி நேரத்துப் பேச்சுக்கு அழிந்து போகும் ஆட்சி, 20 பக்கம் கொண்ட புத்தகத்திற்கு அழிந்துபோகும் ஆட்சி, அரிதாரம் பூசிக்கொண்டு ஆடும் இரண்டு மணி நேர நாடகத்திற்கு அழிந்துபோகும் ஆட்சி எத்தனை நாளைக்கு மானத்துடன் வாழ முடியும்? எத்தனை நாள் மக்கள் மானமிழந்து இருக்க முடியும்.

**எது ஜனநாயகம்?**

ஒழுக்கமுள்ள ஆட்சியாய் இருந்தால், நேர்மையுள்ள அரசாங்கமாக இருந்தால் எங்களுடைய பிரசாரங்களுக்கும் புத்தகங்களுக்கும் தடை போடாமலும், ஜாமீன் கேட்காமலும், பறிமுதல் செய்யாமலும் அவர்கள் தங்கள் கருத்தை, வேலையை, திட்டத்தை எடுத்துக் கூறுவது தானே ஜனநாயக முறை. இவைகளை நாங்கள் எடுத்துச் சொன்னால் வெள்ளையர் பூட்ஸ் நக்கிகள், தேசத் துரோகிகள் என்று கூறிவிட்டால் மக்கள் குறை நீங்கி விடுமா? அவர்கள் இந்த நாட்டு மன்னர்கள் ஆகிவிட முடியுமா?

காமராஜர் செல்லுமிடங்களில் எல்லாம் மக்கள் கூட்டத்தில் பேசவில்லை, போலீஸ் தோழர்களின் நடுவிலே பேசுகிறார். மக்கள் கேள்விகள் கேட்கா வண்ணம் போலீஸ் வேலி. ரோம சரித்திரக் கதை ஒன்று நீரோ மன்னன் பாடப் பிரியமுள்ளவன். குரலோ கழுதையின் குரல் போன்றது. அவன் திடீரென்று கடைத்தெரு சென்று மக்கள் கூட்டத்தைப்போலீஸ் உதவியால் மடக்கி ஒரு இடத்தில் கொண்டுவந்து பாடுவானாம். ஜனங்கள் பிடிக்காது வெளியேறினால் அவர்களின் தலை உருளுமாம். அம்மாதிரியுள்ளது காமராஜர்களின் போக்கும். கம்யூனிஸ்ட் தோழர்களை அடக்கும் போக்கும், சமீபத்திலே தஞ்சை மாவட்டத்து களப்பாடு என்ற கிராமத்திலே 8000 பேர் கொண்ட உழவர் கூட்டத்தை மலபார் போலீஸ் உதவியால் அடித்து, நையப்புடைத்து, பட்டப் பகலிலேயே உழவர் பெண்களை துன்புறுத்தினர் என்ற செய்தி; கடலூர் மத்திய சிறையிலே மேலும் இரு கம்யூனிஸ்டுகள் உயிர்ப்பலி என்ற செய்தி இவற்றைக் கொண்டு இவர்கள் வெள்ளையரோடு பிரஜா உரிமைக்கும், பேச்சு, எழுத்து சுதந்திரத்திற்கும் போராடியவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. செயலளவில ஒன்றையும் காணோமே!" என்று சொல்லி எல்லோரையும் தி. மு. க. வில் சேருமாறு பின்னர் கூறுமாறு கேட்டுக்கொண்டு சுமார் 1½ மணி நேரம் பேசினார். தலைவர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. (வ-உ)

---

## ஆதிக்கக் கருவி!

ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆதிக்கப்படுத்தி ஆட்டிப்படைக்க விரும்பிய போதெல்லாம் அது செய்த முதல் காரியம், தான் ஆதிக்கப்படுத்த விழையுமநாட்டின் மொழியையும் கலாச்சாரத்தையும் சிதைத்து சீரழித்து தன்னால் ஆட்படுத்திக்கொள்ளப்பட்ட அந்நாட்டு மக்கள் மீது தனது சொந்த மொழியைப்புகுத்தியதே யாகுமென்பதை உலக வரலாற்று ஏடுகள் எடுத்துக் கூறுகின்றன. ஜார்மன்னன் ஆட்சியின் கீழ் போலந்து உற்ற நிலையும் அது தான்.

—ஆர். கே. சண்முகம்
சென்னை, 5—11—49

---

## பூனாவில் ரேடியோ ஆராய்ச்சி

### புதியசோதனை நிலையம் நிறுவப்படும்

ரேடியோ எஞ்சினியரிங் கலையில் அழுத்தமான ஆழ்ந்த ஆராய்ச்சி வேலை விரைவில் பூனாவில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. பூனாவிலுள்ள எஞ்சினியரிங் காலேஜொன்றில் நவீனமுறை ரேடியோ சோதனைத் தொழிற்சாலை (லேபோரேட்டரி) ஒன்று நிறுவப்படுமெனத் தெரிகிறது. மூன்றடுக்கு மெத்தை கொண்ட கட்டிடமொன்றுடன் ரூ. 2 லட்சம் பெறுமான சோதனைச் சாதனங்களுடன் 1950 ஜூனில் வேலை தொடங்குமெனக் கூறப்படுகிறது. இதை யொத்த இரு நிலையங்கள் இப்போது பங்களூரிலும், சென்னையிலும் உள்ளன.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### குள்ளப்ப கவுண்டன்பட்டி—சிற்றூர்க்கிளை

குள்ளப்பகவுண்டன்பட்டி, அக் 29.

கூடலூரையடுத்த குள்ளப்ப கவுண்டன்பட்டி தி. மு. க அமைப்புக்கூட்டம் 27-10-49-ல் நடைபெற்றது. கூட்டத்திற்குச் சுமார் 500 பேர் வந்திருந்தனர். கூட்டத் தலைவர் தோழர் எம். எஸ். மதார் ராஜு கழக இலட்சியம் குறித்துப் பேசிய பின் "திராவிட முன்னேற்றக் கழகம்—குள்ளப்பகவுண்டன் பட்டிச் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு ஓர்புதிய செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—எம். எஸ். மதார் ராஜு; துணைச்செயலாளர்:—ஆர். எம். ராஜு, நிதிஉறுப்பினர்:—என். பாண்டியன், விளம்பர உறுப்பினர்:-எஸ். கிருஷ்ணசாமி.

ஏனைய செயலுறுப்பினர்கள்:—எஸ். பொன்னையா, எஸ். பாண்டியன், வி. முத்து, எம். சுந்தன், ஆர். பெருமாள், எ. சின்னமணி, எ. அமல், வி. மொக்சாமி, கே. ராமு, பொன்ராம். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (செ—ர்)

* * *

### மானூம்பதி—சிற்றூர்க்கிளை

மானூம்பதி, அக். 31—

இவ்வூர் திராவிடர் கழகக்கூட்டம் 30-10-49ல் தோழர் மா. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது இவ்வூர் திராவிட கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்-மானூம்பதி சிற்றூர்க்கிளை" என ஒரு மனதாக மாற்றி வமைக்கப்பட்டது. பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். ஆர். தேவசேனாபதி; துணைசெயலாளர்:—என். பச்சையப்பன், பொருள் உறுப்பினர்கள்:—அ. தேவர்சின், எம். குப்புசாமி, விளம்பர உறுப்பினர்:—எம். அழகானந்தம்

ஏனைய செயற்குழுவினர்:—டி. வசிரவேல், ஜி. நாகலிங்கம், சே. சிருட்டினன், எஸ். என். இராஜகோபால், வி. சரவணன், எ. கன்னியப்பன், எஸ். சீனிவாசன், டி. என். இராமச்சந்திரன். பின்புநன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது (செ—ர்)

* * *

### கல்லூரணி—சிற்றூர்க் கிளை

கல்லூரணி, அக். 31—

28-10-49 ல் நடைபெற்றக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—கல்லூரணி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— வி. அருணாசலம்; துணைச்செயலாளர்—சே. காமாட்சி பாண்டியன்; பொருள்உறுப்பினர்—சு. செல்வம்; விளம்பர உறுப்பினர்— வா. ச. நடராசன். ஏனைய செயலுறுப்பினர்கள்— வே. வே. பெருமாள் (பரிசோதகர்), கா. ச. நடராசன், கா. த. பெரியதம்பி, வ. ச. அருணாசலம், பி. பாக்கியம், மு. நடராசன், மு. நாகப்பன். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது (செ-ர்)

* * *

### கல்லணை—சிற்றூர்க் கிளை

கல்லணை, அக். 31—

மதுரை மாவட்டம், கல்லணை தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 30-10-49 அன்று, தோழர் க. வீரணன் தலைமையில் கூடியது. அப்போது, "திராவிட முன்னேற்றக் கழகம்—கல்லணை சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்— என். ராமச்சந்திரன்; துணைச் செயலாளர்—என் ராஜு; நிதி உறுப்பினர்— கே வீரணன்; விளம்பர உறுப்பினர்—எம். செல்லையா. ஏனைய செயலுறுப்பினர்கள்:- வி. தனுஷ்கோடி, வி. இருளப்பன். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது. (வி-உ)

• • •

### கச்சமங்கலம்—சிற்றூர்க் கிளை

கச்சமங்கலம், அக் 31—

தஞ்சை மாவட்டம், கச்சமங்கலம் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 29-10-49-ல் தோழர் தி. இராசுந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர், தி. மு. க. அமைய வேண்டிய இன்றியமையாமை குறித்து சிறிதுநேரம் பேசினார். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம் கச்சமங்கலம்-சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—சு. முத்தீஸ்வரன்; நிதி உறுப்பினர்— தி. இரா. சந்தானம்; விளம்பர உறுப்பினர்—இ. மா. பெரியசாமி. மற்றையசெயலுறுப்பினர்— கு பாலசுப்பிரமணியம், தி. ம. சுந்தரராசன், சு. கிருட்டினசாமி, மு. அரங்கராசன், சி. பிரகலாதன். பின்பு செயலாளர் நன்றி கூற, கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

### சேலம் செவ்வாய்ப்பேட்டை—மேற்கு வட்டம் நகரஉட் கிளை

சேலம், அக். 31—

சேலம் செவ்வாய்ப்பேட்டை மேற்கு வட்டம், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் மண்டியில் தோழர் பொ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், 30-10-49 அன்று தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—சேலம் நகர செவ்வாய்ப்பேட்டை மேற்குவட்ட உட்கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— இ. ஆர். கிருஷ்ணன்; துணைச்செயலாளர்கள்-என் தியாகராஜன், ஆர். வி. சுப்பராயலு; பொருள் உறுப்பினர்— பொ. கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர்— ஆர். நாராயணசாமி, அ. இராமலிங்கம். ஏனைய செயலுறுப்பினர்கள்— அ. ராமசாமி, எஸ். கிருஷ்ணமூர்த்தி, மா. பழனிசாமி எஸ். அண்ணன், அ. சம்பந்தன், அ திருஞானசம்பந்தன், டி. ஆர். துரைராசு. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

• • •

### சென்னைப்புதுப்பேட்டை—நகர உட்கிளை

சென்னை, அக். 31—

சென்னை, புதுப்பேட்டை, 31-வது வட்ட திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் தலைவர் தோழர் எம. எஸ். முகைதீன் தலைமையில் 29-10-49-ல் நடைபெற்றது. அதுபோது, பெருவாரியான உறுப்பினர்களின் வேண்டுகோள்படி, (ஏகமனதாக) 31-வது வட்டத் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர புதுப்பேட்டை (31வது வட்டம்) உட்கிளை" நிறுவப்பட்டது. கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-து. கோவிந்தசாமி, துணைசெயலாளர்:—எஸ். டி. ராசன் நிதி உறுப்பினர்கள்:—எம். எஸ். காதர், மா. வீரராகவன், விளம்பர உறுப்பினர்:—ந. இராமதுரை.

ஏனைய செயற்குழுவினர்:—தி. மதிவாணன் எம். ராகூர் மீரான், பி. வில்லவன் கோதை, எம. இருய், எஸ். ஆர். அந்தோணி. மு. விஸ்வநாத்; பி. டி. சஞ்சீவி, இ. அறிவழகன். மாவட்டக் கழகத் திறகுப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் து. கோவிந்தசாமி, எம். எஸ். காதர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (வி—உ)

## நாட்டு நடப்பு

திருவல்லிக்கேணி— சென்னை, திருவல்லிக்கேணியில் 23-10-49 ல் 'அழகிரி நூல் நிலையம்' என்ற ஒரு நூல் நிலையம் நிறுவப்பட்டது. அதற்குத்தோழர் சிவேல் அவர்களைத் தலைவராகவும். தோழர் சுந்தரமூர்த்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்பு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

சென்னை:—ரங்கசாலைத் தெரு 76 எண்ணுள்ள கட்டடத்தில் 31-10-49 ல்தோழர் மு. பரமானந்தம் தலைமையில்பலமாணவர்கள்கூடி "பூங்காநகர் மாணவர் முன்னேற்ற இயக்கம்" என்ற ஒன்றை நிறுவினர் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. தலைவர்:—மு. பரமானந்தம், செயலாளர்:-பி. ஏ. குழந்தை, பொருள் உறுப்பினர்:—பொ. பழனிசுந்தரம். (செ—ர்)

* * *

வந்தவாசி:-தோழர் ஈ. பட்டாபிராம் அவர்கள் கட்டடத்தில் 8-10-49 அன்று வ. உ.சி இளைஞர் கழகத்திறப்பு விழா நடைபெற்றது. தோழர் கன்னியப்பன் தலைமையில் தோழர் செல்வமுனி அவர்களால் திறப்புவிழாயாற்றப்பட்டது. பின்பு தோழர்கள் வை. சையத்காதர், துலுக்காணம், திருவேங்கடம், கோ. மா. கிருஷ்ணன், ராமு, சண்முகம் ஆகியோர் பேசினர். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (ஒ-கி)

* * *

விக்ரமசிங்கபுரம்— பாவநாசம் லேபர் யூனியன் சார்பில் தோழர் அய்யாகுட்டி அவர்கள் தலைமையில் 21-10-49 ல் தொழிலாளர் கூட்டமொன்று நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சுரணம், மந்தரம், ராமையா, மதுரை மாரியப்பன் ஆகியோர், தேசியத் தொழிற்சங்கத்தாரின் போக்கைக் கண்டித்தும், காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் பித்தலாட்டங்களை விளக்கியும் பேசினர். பின்பு நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (ஒ-கி)

• • •

### பெரிய அக்ரகாரம்—சிற்றூர்க்கிளை

பெரிய அக்ரகாரம், அக் 31—

பெத்தசம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் 30—10—49ல நடைபெற்ற தி. மு. க. அமைப்புக்கூட்டத்தில், "திராவிடமுன்னேற்றக் கழகம்—பெரிய அகராகாரம் சிற்றூர்க்கிளை' நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஆர். எஸ். இஸ்மாயில்; துணைச்செயலாளர்:—எ. எம். கே. அப்துல் ரஹிமான்; பொருள் உறுப்பினர்:—சி. எஸ். எம். முகமது அசேன்; விளம்பர உறுப்பினர்:—ஜி. கமால் பாட்சா மற்ற செயலுறுப்பினர்கள்:— சி எஸ். எம. அபிபுல்லா, எம். அப்துல் ரஹிமான், திருமலைத்தேவன், எ. எம. டி. சுல்தான், எ. கே. ஜே. ஹபிபின். (வி-உ)

# புதுவயல் தமிழ்மன்றத்தின் ஆண்டு விழா

## தி. மு. கழகப் பொதுச் செயலாளருக்கு செட்டி நாடு காட்டிய ஆர்வம் பொங்கிய வரவேற்பு

### புதுவயல் கண்டிராத பெருந்திரளான மக்கள்

புதுவயல், நவ. 1—

புதுவயல் தமிழ் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற தோழர் அண்ணாத்துரை அவர்களையும்—உடன் சென்ற தோழர்கள் சம்பத், காஞ்சிசாமி, காரைக்குடி ராம சுப்பையா, திருச்சி, என் சம்பசிவம், கிருதயராஜ் M A என். நெடுமாறன், அனைவரையும் கோட்டையூர் புகைவண்டி நிலையத்தில், ஆர்வத்துடன் வரவேற்று காரில் அழைத்துச்சென்றனர். வழியில் கண்டனூர் கிட்டாளாச்சி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும், தோழர் அண்ணாத்துரை அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பின், 5 மணிக்குப் புதுவயல் தமிழ் மன்றத்தை அடைந்தார்கள். தோழர் அண்ணாத்துரை அவர்களைப் புதுவயல் தமிழ் மன்றத்தார் வழி நெடுக தோரணங்களையும் வளைவுகளையும் கட்டி சிறந்த முறையில் வரவேற்றார்கள். 2 மணியிலிருந்தே கண்டனூர், அளகாபுரி, கோட்டையூர் பள்ளத்தூர், கானாடுகாத்தான், கொத்தமங்கலம், சொக்கனேந்தல், ஆத்தங்குடி, கீழ்ச்சிவல்பட்டி, நாச்சியாபுரம், காரைக்குடி, தேவக்கோட்டை, கல்லல், கல்லுப்பட்டி, ஆராவயல், புதுக்கோட்டை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மதுரை, அரிமழம், தேனிப்பட்டி, ராயபுரம், திருப்பத்தூர், சிவகங்கை மற்றும் புதுவயலைச் சேர்ந்த கிராமங்கள் ஆகிய இவைகளிலிருந்து மக்கள் குழுமிய வண்ணம் இருந்தனர்.

ஆண்டு விழா, 5-30 மணிக்குப் புதுவயல் ஜனாப் பக்ருடீன் திடலில் துவங்கியது விழாவிற்குத் தோழர் ஈ. வ. கி. சம்பத் அவர்களை தலைமைதாங்கும்படி, தோழர் அழகு வீரப்பன் அவர்கள் கேட்டுகொண்டனர். மற்றொரு தோழர் வழிமொழிந்தார். தோழர் பெரி—சிவனடியான் அவர்கள் தோழர் அண்ணாத்துரைக்கு வரவேற்புத்தமிழ் வாசித்து அளித்தார். வந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினர். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தனது தலைமையுரையை ஆற்றினர். திருச்சி தோழர் கிருதயராஜ் M A. அவர்கள் தமிழ் மக்கள் கடமை என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் பேச எழுந்தார். பேச எழுந்தவுடன், கடல் போல் திரண்டிருந்த மக்கள் கூட்டம் ஆர்வத்துடனும் அன்புத் ததும்பிய முகமலர்ச்சியுடனும் கைதொலி செய்து வரவேற்றனர். அண்ணா அவர்கள் 1-45 மணி நேரம் அறிவுரையாற்றிய பின் (பேச்சு பின்னர் வரும்) விழா இரவு 8-30 மணிக்குத் தலைவர் முடிவுரையுடனும், தோழர் ரங்கநாதன் அவர்கள் நன்றியுரையுடனும் முடிவுற்றது.

விழாவிற்குத் திருச்சி நகர் தி. மு. கழக செயலாளர்கள் எம். எஸ் மணி, தி. உ. சஞ்சீவி பூவாளூர் பொன்னம்பலனார், பொன்னி ஆசிரியர் முருகு சுப்ரமணியம், காரைக்குடி பரமசிவம், மற்றும் செட்டிநாடு பகுதி பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர்.

விழா முடிந்த பின் வந்திருந்த தோழர்களனைவரும் உணவு அருந்திய பின் இரவு, 9-30 மணி ரயிலில் மன்றத் தோழர்கள் அன்புடன் வந்து வழியனுப்ப, தோழர்கள் அண்ணாத்துரை, சம்பத் ஆகியோர் திருச்சிக்குப் புறப்பட்டார்கள். (ஒ-கி)

### சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர். "மாலைமணி"

அறிவிப்பு

ரெஜிஸ்தர் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. மரியப்ப முதலியார், மதுரை.

"பொன்னி" மாதம் இரு முறை

கொள்கைக்குக் கொள்கை! கருத்துக்குக் கருத்து! கலைவளர்ச்சிக்குக் கலைவனம்!

இதுதான 'பொன்னி'யின சிறப்பு.

10—11—49 முதல் 72 பக்கங்களுடன் பல புதிய பகுதிகளுடன் வெளிவருகிறது விலை 5. அணாதான்

ஆண்டுச் சந்தா ரூ. 7—0—0 ஆறுமாதச் சந்தா ரூ. 3—12—0

"பொன்னி" அலுவலகம், த. பெ. 39, புதுக்கோட்டை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1